Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 7.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 05 | வியாழக்கிழமை | (21.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 307

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து

# நோர்வே வெளிவிவகார அமைச்சருடன்

# சு.ப. தமிழ்ச்செல்வன் மந்திராலோசனை

### சமாதானத்தில் தமிழ்மக்கள் நம்பிக்கை இழப்பு

**(நமது நிருபர்)**

**ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னை நேற்று காலை 10 மணிக்கு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இப் பேச்சுவார்த்தையின்போது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும் கலந்துகொண்டார்.** **(14 ஆம் பக்கம் பார்க்க)**

## புலிகளை சந்திக்கப்போவதாக வெளிவந்த செய்திகளுக்கு மறுப்பு

### மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக வெளியான செய்திகளை மல்வத்தை மகா நாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மறுத்துள்ளதுடன், அச்செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மகா நாயக்கரைச் சந்தித்தபோதே விடுதலைப் புலிகளைத் தான் சந்திக்கப்போவதாக வெளிவந்த செய்திகளை மறுத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அமைக்கப்பட்டுள்ள சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய சமாதான சபையில் அங்கம்பெறாத கட்சிகளினால் நடத்தப்படுகின்ற வைபவங்களில் எதிலும் நாம் கலந்துகொள்ளப்போவதில்லை.

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை நான் எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன். இந்நிலையில் ஜாதிக ஹெலஉறுமயவின் உறுப்பி[illegible]கள் நான் கூறிய யதார்த்தத்தை இப்பொது புரிந்துகொண்டார்கள் என்று மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்தார். (ம)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது தடவையாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேக்கநிலை அடைந்துள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாகவும் மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வதற்காகவே ஜனாதிபதி கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களுடனான இச் சந்திப்பு ஜனாதிபதி இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்பே இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்த பின் இடம்பெறவுள்ள இச் சந்திப்பின்போது தேசிய நல்லிணக்க ஆலோசனைச் சபையில் தமிழ்க் கூட்டமைப்பினர் அங்கம் வகிப்பது தொடர்பாகவும் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்படுகிறது. (ம)

# முஸ்லிம் விறகு வியாபாரி மட்டு. வில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகனேரி குளத்துமடுவில் நேற்று முன்தினமிரவு முஸ்லிம் விறகு வியாபாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தனது வீட்டிலிருந்து சக வியாபாரிகளுடன் விறகு வெட்டுவதற்காக காட்டிற்குச் சென்று அங்கு தங்கியிருந்த சமயமே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது மீராமொஹைதீன் ஹனிபா (வயது33) என்பவரே மரணமானவராவர். இரவு உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் கைக்குண்டு மற்றும் வேட்டுச் சத்தம் கேட்டதாகவும் அதனையடுத்து தாம் ஓட முற்பட்டபோது இவர் மீது துப்பாக்கி சூடுபட்டதாகவும் சக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

தமது கட்டுப்பாடுப் பிரதேசத்திற்குள் ஊடுருவியுள்ள கருணா குழுவினரால் தமது போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியே இவ் வியாபாரி மரணமாகியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மினிவான் தடம்புரண்டதில் 20 பயணிகள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலையிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த மினிவான் பாதையை விட்டு விலகி தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த இருபது பேர் படுகாயமடைந்தனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நாவற்குழி பகுதியில் இடம்பெற்றது.

வாகனம் ஒன்றை முந்திச் செல்ல மு[illegible]பட்டவேளை வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது.

சம்பவம் இடம்பெற்றதையடுத்து அப்பகுதியில் நின்ற மக்களால் பணிகள் மீட்[illegible]

(14 ஆம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ உதவித் தொகையில் இதுவரை 95 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது

### நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

டோக்கியோ உச்சி மாநாட்டில் உறுதிமொழி வழங்கப்பட்ட உதவித் தொகையில் கணிசமான தொகை இலங்கைக்கு இதுவரை கிடைத்துள்ளது.

கடந்த வருடத்தில் 62 கோடி அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றன. மேலும் 32 கோடி 80 லட்சம் டொலர் கடந்த மாதம் இலங்கைக்கு வழங்கப்பட்டதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இவ் விபரங்களை வெளியிட்டுள்ளார்.

நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.வி. விஜயசுந்தர நாட்டின் வருங்கால அபிவிருத்தி பற்றி பிரதிநிதிகளுக்க விளக்கம் அளித்தார்.

டோக்கியோ உச்சி மாநாட்டின் நிதியைப் பயன்படுத்தி 255 அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றிற்குச் செலவாகும் பணம் 420 கோடி டொலர்களுக்குக் கூடுதலாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவை பதவியிலிருந்து அகற்றவேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பாக அரச கட்சித் தலைவர்களிடையே நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சில நிகழ்வுகளில் சபாநாயகர் பாரபட்சமாக நடந்துகொண்டுள்ளார் எனவும், இதனை அரச கட்சித் தலைவர்கள் அவரிடம் நேரிடையாகச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-06)

## பாராளுமன்றில் வாணி விழா

(கொழும்பு)

பாராளுமன்ற வரலாற்றில் முதற்தடவையாக நேற்று வாணி விழ[illegible] கொண்டாடப்பட்டது. வாணி விழாவையொட்டி பாராளுமன்ற கட்டடத் தொகுதி [illegible] சிறப்ப[illegible] அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இந்து கலாசார அலுவல்கள் அ[illegible]சின் ஏற்பாட்டில் நடைபெற்ற வாணி [illegible]வில் பாராளுமன்றில் அங்கம் வ[illegible] அனைத்து அரசியல் கட்சிகளும் [illegible]

(14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தற்போதைய அரசாங்கத்திலும் ஊழல் மோசடி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் கடந்தவாரம் இரு முறைப் பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினாலும், விவசாய அமைச்சர் அனுர குமார திஸநாயக்கவினாலும் விடுக்கப்பட்ட இரு அறிக்கைகள் தொடர்பிலேயே இவ்விரு முறைப்பாடுகளும் இலஞ்ச ஊழல் ஆணைக குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க மாத்தளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில், பிரதமரின் கீழ் இயங்கும் பெருந்தெருக்கள் அமைச்சில் ஜனாதிபதியின் அடியாட்களால் ஊழல் நடைபெற்றுள்ளது என கூறியிருந்தார்.

இது தொடர்பில் முதலாவது முறைப் பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இரண்டாவதாக 10 ஆயிரம் குளங்களை புனரமைப்புச் செய்தததில் இடம்பெற்ற ஊழல் குறித்து முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றுள்ளன.

ஜனாதிபதியினாலும், விவசாய அமைச்சர் அனுர குமார திஸாநாயக்காவினாலும் விடுக்கப்பட்ட இரு அறிக்கைகள் தொடர்பில் இரு முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள் ளது. (ற-6)

# அங்கவீனர்களுக்கான உபகரணங்களை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வழங்கவுள்ளது

யாழ். மாவட்டத்திலுள்ள அங்கவீனர்களுக்கான உபகரணங்களை வழங்கவும், ஏற்கனவே அவற்றை வைத்திருப்பவர்களுக்கான பராமரிப்பு சேவையை வழங்கவும் யாழ். மாவட்ட ஜெயப்பூர் நிறுவனத்தின் ஊடாக யு.என்.எச்.சி.ஆர் முன்வந்திருக்கின்றது. இதன்படி இம்மாதம் தொடக்கம் முதல் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இதற்கென தெரிவுசெய்யப்பட்டோரின் விபரம் வருமாறு:-

ஊர்காவற்றுறையில் 8 பேரும், வேலணையில் 7 பேரும், நெடுந்தீவில் 2 பேரும், உடுவிலில் 25 பேரும், தெல்லிப்பழையில் 2 பேரும், சங்கானையில் 11 பேரும், காரைநகரில் 15 பேரும், சண்டிலிப்பாயில் 25 பேரும், சாவகச்சேரியில் 11 பேரும், மருதங்கேணியில் ஒருவரும், பருத்தித்துறையில் 9 பேரும், கோப்பாயில் 23 பேரும், நல்லூரில் 3 பேரும், யாழ்ப்பாணத்தில் 10 பேரும் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ற-5)

# நாட்டில் முதல் முறையாக சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்த தேரர் எம்.பி

(கொழும்பு)

பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நேற்றைய தினம முதற்தடவையாக தேரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மா லொக்கதேரரே இவ்வாறு பாராளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லும் பொறுப்பை நேற்று ஏற்றுக்கொண்டிருந்தார்.

பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தவின் யோசனைக்கு அமைவாகவே இவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் ஆசனத்தில் உடுவேதம்மா லொக்கதேரர் நேற்று அமர்ந்தபோது அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவது தொடாபான தனிநபர் மனுவொன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (க-61)

# பிறந்த ஐந்து நாட்களில் பெண்ணாக மாறிய ஆண்குழந்தை

பிறந்த 5 நாட்களில் ஆண் குழந்தையொன்று பெண்ணாக மாறிய அதிசய சம்பவம் அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையொன்றில் இடம்பெற்றுள்ளது.

லிசாகிரினே என்ற பெண் காசாளருக்கு ஆண்குழந்தையொன்று பிறந்தது. குழந்தை ஆண்குழந்தையாகவிருந்தால் லிசாகிரினே மகிழ்ச்சியுடன் இருந்தார்.

ஆனால் அந்தக்குழந்தை பிறந்த ஐந்து நாட்களில் பெண்குழந்தையாக மாறியிருந்தது. இதனால் குழந்தையின் பெற்றோரும், மருத்துவர்களும் அதிர்ச்சியடைந்தார்கள்.

குழந்தையை மருத்துவர்கள் பரிசோதனை செய்தார்கள். அப்போது மிகமிக அபூர்வமான **Conenital adrenal hy per plasia** என்ற நோய் குழந்தைக்கு இருப்பது தெரியவந்தது.

இந்தநோய் தாக்கிய பெண் குழந்தைகளின் பிறப்புறுப்பிலுள்ள •கிளிட்டோரில் பகுதி அளவுக்கு அதிகமாக வளர்ச்சியடைந்து பார்ப்பதற்கு ஆண் உறுப்புபோல காணப்படும். இதனால் இத்தகைய குழந்தைகள் ஆண்குழந்தைகள் போல காட்சி அளிப்பார்கள். இதனை குறிப்பிட்ட குழந்தையின் தாய் கிரினேயும் ஏற்றுக்கொண்டார்.

இதனையடுத்து அந்தக் குழந்தைக்கு அதிநவீன காஸ்மெடிக் அறுவைச் சிகிச்சை மூலம் பிறப்புறுப்பு சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## விவாத அரங்கு - 6

விடயம் : மதுமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா? தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான நிவாரண விநியோகம் குறைக்கப்படவில்லையென அறிவிப்பு

(புத்தளம்)

வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தில் எவ்வித குறைப்பையும் நிவாரண புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு மேற்கொள்ளாது என்ற உறுதியை தம்மிடம் வழங்கியுள்ளதாக வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மாவட்டங்களில் வாழும் இடம்பெயர்ந்த வடமாகாண முஸ்லிம் மக்களுக்கு கடந்த 4 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமை குறித்து தாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து அதற்கான நிதி ஒதுக்கீட்டை ஜனாதிபதி மேற்கொண்டிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதனையடுத்து புனர்வாழ்வு அமைச்சினால் இவ்வருடத்திற்குள் செய்யப்படவிருந்த 30 வீத நிவாரணக் குறைப்பை தற்காலிகமாகக் கைவிடுவதாக புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மாவட்டச் செயலர்களுக்கு அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்னும் இரு வாரங்களுக்குள் இம் மக்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்யும் வகையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாக புத்தளம் பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்திலுள்ள 4 ஆயிரத்து 600 இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கான உலர்உணவு நிவாரணத்துக்கென 27.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ற-15)

# சின்னஞ்சிறு செய்திகள்

## புனரமைப்பு

1985 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட பொலிகண்டி குடியேற்றத்திட்டத்தில் அமைந்துள்ள செம்மீன் படிப்பகம் அவ்வூர் மக்களின் உதவியுடன் மீளவும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ப-103)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றத்தினால் நடாத்தப்படும் வாணி விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் சு.பிரேமன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசியுரை, வாழ்த்துரையை தொடர்ந்து 'இன்றைய காலகட்டத்தில் தமிழர் பண்பாடு தழுவிச் செல்கிறது, நழுவிச்செல்கிறது' எனும் விடயம்பற்றி பட்டிமன்றம் இடம்பெறும். இப்பட்டிமன்றத்தில் ஓய்வுநிலை நீதிபதி மு.திருநாவுக்கரசு நடுவராகப் பங்கேற்கவுள்ளார். ஏனைய கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ற)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணை வங்களாவடியில் அவ்வூர் மக்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அறநெறிபாடசாலை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்தினால் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட இருக்கின்றது.

இந்நிகழ்வில் சைவப்புலவர் ஞானசம்பந்தரின் சிறப்புரையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ற-5)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக நலன்புரி கழகத்தினால் நடாத்தப்படவுள்ள நவராத்திரி விழா நாளை வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் 'அபிராமி கடைக்கண்களே' எனும் விடயம்பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். தொடர்ந்து கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய மாணவர்களினதும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ற-5)

## விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் தினத்தை ஒட்டி உரும்பிராய் லயன்ஸ் கழகம் இன்று வியாழக்கிழமை காலை 9.15க்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் விசேட கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபரும் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் முதலாவது உபதலைவருமான லயன் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், 'ஐக்கிய நாடுகள் தினமும் உலக சமாதானமும்' எனும் பொருளில் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு விசேட கருத்துரை வழங்கவுள்ளார். (ற)

## திறப்புவிழாவும், பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட திக்கம் கலாசார மண்டபத் திறப்புவிழாவும், பரிசளிப்புவிழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய வளாகத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் க.சுதேஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா. சிவசாமியும் , சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிங்கம், பி.சுரேஸ்பிரேமச்சந்திரன், ஜி.கஜேந்திரகுமார், செ.கஜேந்திரன், மாவை சேனாதிராஜா, ந.ரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன், ம.க.ஈழவேந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ற-5)

## ஆங்கில வகுப்புக்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி மக்கள் நலன் சேவைச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச ஆங்கில வகுப்புக்கள் ஒக்டோபர் 30 ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் ஆங்கில வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ப-47)

## அடிக்கல் நாட்டல்

(சாவகச்சேரி)

மீசாலை மேற்கு கரும்பு நாவடி ஆலயத்திற்கு அண்மையில் ஸ்ரீகாயத்திரி காமகோடி பீட மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் அவர்களது ஆசியுடன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அவர்கள் அடிக்கல்லை நட்டு கட்டட வேலைகளை ஆரம்பித்து வைப்பார். (ப-29)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "சமயம் காட்டிய ஒழுக்கநெறிகள்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு ஒன்று இடம்பெறவுள்ளது.

இதில் நா.கண்ணதாசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார். (ப-35)

## முதலாவது இடம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நூலகவாரத்தை ஒட்டி இடம்பெற்ற சிறந்த நூலகங்களுக்கான தெரிவில் சாவசக்சேரி டிறிபேக் கல்லூரி நூலகம் சிறந்த நூலகமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கான விருது அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய நூலகத்தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ப-127)

# ஜாதிக ஹெல உறுமய கட்சியில் சாதாரண மக்களும் சேர்க்கப்படுவர்

## அத்துரலியே ரத்ன தேரர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவினுள் தனியாகப் பிக்குகள் மட்டுமே அங்கம் வகிக்கவேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. சாதாரண மக்களும் எதிர்வரும் தேர்தல்களில் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என ஹெல உறுமய அறிவித்துள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத்தலைவர் வண.அத்துரலியே ரத்னதேரர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அம்மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது ஹெலஉறுமயவினுள் உள்ள உட்பூசல்கள் விரைவில் சரியாகிவிடும். கட்சியின் ஒழுக்காற்றுக்குழுவைப் பலப்படுத்துவதற்கு உபகுழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளது.

அத்துடன், உடுவே தம்மாலோக தேரர் கட்சியில் இருந்து விலகப்போவதாக செய்திகள் வெளியாகியிருந்த போதும் தம்மாலோக தேரர் தனது இராஜினாமா கடிதத்தை இன்னமும் உத்தியோகபூர்வமாக அனுப்பவில்லை.

மேலும், எந்தக்கட்சியினருடனும் இணைந்து செயலாற்றும் நோக்கம் எமக்குக்கிடையாது. கொலன்னவே ஸ்ரீ சுமங்கள தேரர், உடுவே தம்மாலோக தேரர் ஆகியோர் தொடர்ந்தும் எமது கட்சியில் செயலாற்றுவர் என நம்புகிறோம் எனக் கூறினார். (ற-6)

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகு இம்மாத இறுதியில் புதிய கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புகள் பதிவுகள், பரீட்சைகள் அலகின் புதிய கட்டடம் ஒன்று பல்கலைக்கழகத்துக்கும், மருத்துவ பீடத்துக்கும் இடையில் புதிதாகத் திறக்கப்படவிருக்கின்றது.

இப்புதிய கட்டடத்தை இம்மாத இறுதியில் சுபநாளில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ் வைபரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

தற்போதைய கட்டடத்தில் இடம்பெறும் செயற்பாடுகள் அனைத்தும விரைவில் புதிய கட்ட அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுமென வெளிவாரிப்பட்டப படிப்புகள் அலகின் இணைப்பதிகாரி தெரிவித்தார். (ற-5)

## இரு கல்வியாண்டுப் பரீட்சைகளை ஒரே தடவையில் நடத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின 2001/2002, 2002/2003ஆம் கல்வி ஆண்டுக்கான பரீட்சைகளை மாணவர்கள் எதிர்நோக்கியுள்ளதனால், இவர்களுக்கான இரண்டு கல்வி ஆணடுக்கான பரீட்சைகளை ஒரே தடவையில் நடாத்துவதற்கு யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புகள் அலகின் பரீட்சைக் கிளை தீர்மானித்துள்ளதுடன் இதற்கான ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

இப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் யாழ். இந்துக்கல்லூரியிலும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 2000/2001ஆம் கல்வியாண்டின் முதலாம் ஆண்டு மாணவர்களின் பரீட்சை முடிவுகள் மிக விரைவில் வெளியிடப் பட இருக்கின்றன. (ற-5)

## சாவகச்சேரி பகுதியில் 'யூஸ்' தயாரிப்பவர்கள் அனுமதி பெறவேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் 'யூஸ்' தயாரிப்பில், ஈடுபடுபவர்கள் நகர சபையினரிடம் அனுமதி பெற்று யூஸ் தயாரிப்பில் ஈடுபட வேண்டுமென சாவகச்சேரி நகரசபைச் செயலர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர் பகுதியில் யூஸ் தயாரிப்பில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளது.

இவர்கள் தங்களது வியாபாரப் போட்டியினையும் இலாபத்தினையுமே கவனத்தில் கொண்டு செயற்படுவதால் உரிய சுகாதார முறையினை பின்பற்றுவதில்லை எனவும், இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் தொற்று நோய் தாக்குதல்களுக்கு உள்ளாவதாகக் கிடைத்துள்ள முறைப்பாட்டினை அடுத்தே நகரசபைச் செயலாளர் இவ் அறிவிப்பினை விடுத்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இவ்வாறு அனுமதி பெறாமல் குளிர்பானங்கள் தயாரிக்கும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப-127)

## தென்மராட்சி தெற்கு–தனங்கிளப்பில் இராணுவ பாதுகாப்பு வலய நடைமுறையால் நகரக் கழிவுகளை கொட்ட இடமில்லை

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு தனங்கிளபபில் காணப்படும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானம், மற்றும் கிறிஸ்தவ மயானங்கள் காணப்படுகினறன. இதனால் படைத்தரப்பு இறுதிக் கிரியைகளிற்காக இவ் மயானஙகளை மக்கள் பாவனைக்கு அனுமதித்துள்ள போதிலும் அங்கு காணப்படும் இராணுவ காவலரன காரணமாக பொது மக்கள் பெரும் அச்சத்துடனேயே இறுதிக் கிரியைகளிற்காகச் சென்று வருகின்றனர்.

சாவகச்சேரி நகரசபையினரால் அனறாடம் நகர்ப்பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் கடந்த 2000ஆம் ஆண்டுவரை தனங்கிளப்பு வீதிக்கு அருகில் உள்ள கடல் நீரேரிக்கு அருகிலே கொட்டப்பட்டு எரிக்கப் பட்டுவந்தது. கடந்த 2000ஆம் ஆண்டிற்கு பின்னர் படையினர் இப் பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வைத்திருப்பதால் நகர கழிவுகளை கொல்லங்கிராய் பகுதியில் உள்ள மயானப் பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது.

இதனால யாழ்.சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக மக்கள் எதிர்ப்புத தெரிவத்துள்ளதால் நகரசபையினரால் நகர் பகுதியில் காணப்படும் குப்பைகளை அகற்ற முடியாத இககட்டான நிலை ஏற்பட்டுள்ளது (ப-12)



வதிரி வடஇலங்கை ஸ்ரீ பரமானந்த சிறார் முதியோர் ஆச்சிரமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையத்தை ஆச்சிரம அறங்காவலர் சபைச் செயலாளர் எம்.சிவசண்முகம் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்துவைப்பதையும், அருகில் அறங்காவலர் சபைத் தலைவர் டாக்டர் என்.பத்மநாதன், அறங்காவலர் சபை நிர்வாக செயலாளர் எம்.சுந்தரலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.
படம்:- மருதங்கேணி செய்தியாளர்

## அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு

### ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)



அரசாங்கத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப் படவுள்ளன.

இதுவரை பதவியில் உறுதிப் படுத்தப்படாத சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அடுத்த இரண்டு மாதகாலப்பகுதிக்குள் அவரவர் பதவிகள் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளார்.

கொழுமபில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி விவசாய ஆராய்ச்சி உத்தியோகஸ்தர்களின் ஏழாவது தேசிய மாநாட்டில கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

உலகவங்கியின் எதிர்ப்புக்கள் பலவற்றிற்கும் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்ட சமுர்த்திச் செயற்திட்டம், கடந்தகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் எதிர்பார்த்த இலக்கை நோக்கிச் செல்லவும் இலலை. உரிய இலககை அடையவுமில்லை.

சுமார் 32ஆயிரம் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களில் மூவாயிரம்பேர் மாத்திரமே அவர்களின் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

அரசியல் பழிவாங்கல் காரணமாக பதவி இழந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

சமுர்த்தி உத்தியோகஸ்தருக்கு வீடமைப்பு இடர்காப்புக் கடன் திட்டமொன்றைக் கொண்டு வருவதுடன், அவர்களுக்குப் பதவி உயர்வுகளும், இடமாற்றங்களும் வழங்கப்படவுள்ளன.

ஒரு மாதகாலத்தினுள் இதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இதற்காக சுயாதீனககுழு ஒன்றும் நியமிக்கப் படவுள்ளது. சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் மோட்டார் சைக்கிளகளைக் கொள்வனவு செய்வதற்கு விஷேட கடன்கள் வழங்கப்படவுள்ளன. 'கனிபுகுதுவர்' திட்டத்தின் கீழ் 13ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு, சுமார் 50 ஆயிரம் சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதறகான ஆரம்பக்கட்ட வேலைகள் நாளை வெள்ளிக்கிழமை அநுராதபுரத்தில் இருந்து ஆரம்பிக்கப் படும் எனத் தெரிவித்தார். (ற-121)


## படுகொலைச் சம்பவங்களை அடுத்து கிழக்கில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணததில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் படுகொலைகளை அடுதது அங்குள்ள அரசியல்வாதிகளின் பாதுகாப்பினை மேலும் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக கிழக்குப் பிராந்தியப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பொது மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல், படுகொலைச் சம்பவங்களை அடுத்தே இந்நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சாாபில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கிங்ஸ்லி இராசநாயகம் இனந்தெரியாதோரால் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதணையடுத்து கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-121)



நல்லூர் ஆனந்த வித்தியாலய விளையாட்டுப் போட்டியில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். படம்:- அல்லைப்பிட்டி செய்தியாளர்

## நவராத்திரிப் பாமாலை



### சரஸ்வதி துதி

### கலைகள் பலவுந் தந்திருள்வாய்

கல்விக்கரசி கலைவாணி
காத்திடுவாய் எமைத்தினம் பேணி
தொல்லைகள் யாவும் நீக்கி நல்ல
கலைகள் பலவுந் தந்தருவாய்
காலை மாலை வணங்குகிறேன்
கடமைகள் பலவும் செய்கின்றேன்
கல்வி கற்று உயர்வடைய
கலைத் தாய் வரமும் தருவாயே

இ. ஆராதனா,
யா/மட்டுவில் தெற்கு, அ.மி.த.க. பாடசாலை.

### பணிந்தோமே

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய்
வீணை ஒலியினில் இணைந்தவளே
உள்ளம் நிறைய கலைகளை
ஊட்டும் தாயே பணிந்தோமே

யோ. சிவ உமாகரன்
தரம்-11, ஏழாலை மகாவித்தியாலயம்.

### சரஸ்வதி தேவியே...

வெள்ளைதாமரையில் உறைந்திருவாய்
வெள்ளை சேலை தனை உடுத்தி
வீணை தனை கரங்களில் ஏந்தி
கல்வி செல்வம் வழங்கிடுவாய் தேவியே

பிரதாயினி, .
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

### அருள் தந்திடுவாய்

அம்பிகையே ஈஸ்வரியே வாணி சரஸ்வதியே
அகிலமெல்லாம் போற்றும் ஆதி பராசத்தியே
அந்தமே இல்லாத அருள் சக்தியே – தேவி
அருளாட்சி தந்து கல்விச்செல்வம் அளித்
திடுவாயே – அம்பிகையே

சண்முகநாதன் றஜிதா,
தரம்-13, யா/அருணோதயக்கல்லூரி.

### அருள்வாயே

கலைவாணியே தாயே
கல்வியெனும் செல்வத்தை
வியாலே உன்னைப் பாட
னிவோடு அருள்வாயே

மா. தனுஷா, தரம் 13.
ஊ/புனித அந்தோனியார் கல்லூரி.

### கலைமகளே உனை வணங்குகிறோம்

ஆயகலைகள் அறுபத்து நான்கையும்
அள்ளி வழங்கும் அன்னையே! – நல்ல
கல்வியை எமக்கு தந்தருள்வாய்
கலை மகளே உனை வணங்குகிறோம்!

கு. நிருஜன்,
தரம்-10 யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.

# இலங்கை சாரணர் சங்கத்தின் கில்வெல் மீள் ஒன்று கூடல்

(ஆனைக்கோட்டை)

இலங்கை சாரணர் சங்கத்தின் கில்வெல் மீள் ஒன்று கூடல் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரி நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு இலங்கையில் 1912 இல் சாரணியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து 92 வருடங்களின் பின்னர், முதன் முதல் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் மகளிர் கல்லூாியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய சாரணர் மாவட்டங்களும் ஒத்தாசை வழங்குகின்றன.

இந் நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக சாரணத் தலைவர்களுக்கான உயர் விருதான தருசின்னம் பெற்ற 225 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். ''சாரணியத்தின் மூலம் நிரந்தர சமாதானத்திற்கு வழி வகுபபோம்'' எனும் கருப்பொருளிலேயே இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது சமாதானப் பேரணியும், சிரமதானமும் விசேட நிகழ்வாக இடம்பெறவுள்ளது. இவை சாரணியத்தின் இன, மத பேதமற்ற கோட்பாட்டினை வெளிக்கொணர்வதாகவும், ஆற்றுப்படுத்துவதாகவும் அமையும்.

இந்நிகழ்வில் பிரதம ஆணையாளர், பிரதிப் பிரதம ஆணையாளர், தேசிய பயிற்சி ஆணையாளர் உட்பட இலங்கைச் சாரணர் சங்க முக்கியஸ்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவப் பணியகப் பொறுப்பாளர், கல்விக் கழக நடுவப் பணியகப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட அரச அதிபர் உட்பட ஏனைய பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள வுள்ளனர்.

காலை 6.30-7.30 மணிவரை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திலும், காலை 9.30-10.30 மணிவரை கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும், 12.00-1.00 மணி வரை கைதடி நவீல்ட் பாடசாலையிலும், 1.15 - 1.30 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 1.45- 2.00 மணிவரை நல்லூர் கந்தசாமி கோவிலிலும், மாலை 3.00 மணி முதல் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ற-72)

## காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தலைவர் உட்பட நான்கு பேர் இராஜிநாமா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் உட்பட நான்குபேர் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்துள்ளனர்.

தலைவர் அ.சிற்றம்பலம், நிர்வாக உறுப்பினர்கள் கே.ஏகாம்பரம், க.கனகரட்ணம், க.குலராசா ஆகியோரே தமது பதவிகளை இராஜிநாமாச் செய்துள்ளனர்.

தமது செயல்பாடுகளுக்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக்கூறியே அவர்கள் தமது பதவிகளை இராஜிநாமாச் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களது இராஜிநாமாக் கடிதங்களை பொது முகாமையாளர் ஊடாக கூட்டுறவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். (ச)

## நினைவுப் பேருரையும் நூல் அறிமுக விழாவும்

(யாழ்ப்பாணம்)

நியநத்ரீ அனுசரணையுடன வழங்கும் பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக் குருக்களின் 3ஆம் ஆண்டு நினைவுப் பேருரை, நூல் அறிமுக விழா மற்றும் பரிசளிப்பு விழா ஆகியன எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் பிரமஸ்ரீ பா.கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி பிரமஸ்ரீ ப.கோபாலக்ருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நினைவுப் பேருரையை நல்லூர் சிவன் கோயில தர்ம கர்த்தாவும் பிரதான குருவு மான பிரமஸ்ரீ கா.இரத்தின கைலாசநாதக்குருக்கள் வழங்கவுள்ளார்.

நூலின் முதல் பிரதியை பேராசிரியர் பிரமஸ்ரீ ப.கோபால கிருஷ்ணஐயர் பெற்றுக்கொள்ளவுள்ளார். அத்துடன், இவ்வாண்டு இடம்பெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த அந்தன மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ற)

## திருக்குறள் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் மனனப்போட்டிகள் அடுத்தமாதம் 2,3,4ஆம் திகதிகளில் யாழ்.கல்வி வலய பணிமனையில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் குறித்த கடிதங்கள் பாடசாலைகளுக்கு வலயக் கல்விப் பணிமனையால அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-5)

## சமாதான நடவடிக்கைகள் தொடர்பில்

# ஜனாதிபதியின் மௌனம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சேபம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவு வழங்குவதற்கு வரலாற்றில் முதற்தடவையாக பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்துள்ள போதும், ஜனாதிபதி இது குறித்து மௌனமாக இருப்பது கவலைக்குரிய விடயமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒஸ்லோ பிரகடனத்துக்கு அமைவாகவோ; டோக்கியோவில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு அமைவாகவோ எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் ஐக்கிய தேசியக்கட்சி பூரண ஆதரவினை வழங்கும் என ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தியுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்களை கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசுடன், மக்கள் விடுதலை முன்னணி கைகோர்த்துச் செயற்படவேண்டும்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு எதிர்ப்புக்களைத் தெரிவித்து வந்த அரசாங்கம், இப்போது அதன் பலாபலன்களை அனுபவித்து வருகிறது எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)





காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கு பிரித்தானியா காரை நலன்புரி மன்றத்தினால் இரு கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதற்கான பத்திரத்தை அகில இலங்கை சமாதான நீதிவான் க.சோமசேகரம் கல்லூரி அதிபர் ந.பரமசிவத்திடம் கையளிப்பதனையும், வழங்கப்பட்ட கணனிகளுடன் பிரித்தானியா காரை நலன் புரி மன்ற அங்கத்தவர்கள், கல்லூரி அதிபர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- காரைநகர் செய்தியாளர்)

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவுக்கு முன்னேற வாய்ப்பு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்றால் டெஸ்ட் தரவரிசையில் இந்தி[illegible] 2ஆவது இடத்துக்கு முன்னேறும் நிலை ஏற்படும. அதே நேரத்தில், உலகச் சம்பியன் அவுஸ்திரேலியா வென்றாலும் தோற்றாலும் முதல் இடத்தில் நிலைத்து நிற்கும்.

சாவதேச கிரிக்கெற் சபையின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலியா தற்போது 129 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. இந்தியா 104 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் உள்ளது. அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் வென்றால் இந்தியா 111 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்துக்கு முன்னேற முடியும்.

அதே நேரத்தில், இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வென்றால் பாகிஸ்தான் இரண்டாவது இடத்தைப் பிடிக்கும். தற்போது 105 புள்ளிகளுடன் உள்ள பாகிஸ்தான் 2 டெஸ்டையும் வென்றால் 110 புள்ளிகளைப்பெறும்.

இங்கிலாந்து தற்போது 109 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உளளது. ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலின்படி அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முதல் இடத்திலேயே நிற்கும். அதேநேரத்தில் 5 நாடுகள் இரண்டாவது இடத்திற்கான போட்டியில் உள்ளன. இரண்டாவது இடத்திற்கு கடந்த ஆகஸ்டில் முன்னேறிய இங்கிலாந்து இனி டிசம்பரில் தான் தென்னாபிரிக்காவுடன் விளையாடுகிறது. அதனால் தற்போத இரண்டாவது இடத்தைப் பிடிக்க இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அதிக வாய்ப்புள்ளது.

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா இடையேயான போட்டியின் வெற்றியைப் பொறுத்து அவ்விரு அணிகளில் ஏதாவது ஒன்று இரண்டாவது இடத்துக்கு நுழையக்கூடும். இலங்கை அணி பாகிஸ்தானை 2:0என்ற கணக்கில் வென்றாலும் தற்போதுள்ள 103 புள்ளிகளுடன் மேலும் 5 புள்ளிகளைச்சேர்த்து 108 புள்ளிகளைப்பெறும். இருப்பினும் அதனால் இரண்டாவது இடத்தைப் பிடிக்கமுடியாது.

அதேபோல், பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் வென்றால் நியூசிலாந்துக்குக் கூடுதலாக ஒரு புள்ளி கிடைக்கும். அதே நேரத்தில் தொடரை பங்களாதேஷ் வெற்றி தோல்வியின்றி முடிததால் அதன் தற்போதைய ஒரு புள்ளியுடன் மேலும் ஒரு புள்ளி சேரும்.

தற்போதைய நிலையில் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியல் விபரம் வருமாறு:

1. அவுஸ்திரேலியா-129 புள்ளிகள
2. இஙகிலாந்து-109 புள்ளிகள்
3. பாகிஸ்தான்-105புள்ளிகள்
4. இந்தியா-104 புள்ளிகள்
5. இலங்கை-103 புள்ளிகள்
6. தென்னாபிரிக்கா 102 புள்ளிகள்
7. நியூசிலாந்து-94 புள்ளிகள்
8. மேற்கிந்திய தீவுகள்-73 புள்ளிகள்
9. சிம்பாப்வே-51 புள்ளிகள்
10. பங்களாதேஷ்-1 புள்ளி.

(ப-7)

## மும்பை டெஸ்ட் போட்டியில் பொன்டிங் விளையாடுவார்

இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுககிடையில் மும்பையில் எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி தொடங்கும் 4ஆவது கிரிக்கெற் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கிப்பொன்டிங் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவிலிருந்து அவர் தேறிவருவதாகவும் மும்பை டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடும் வாய்ப்புளளதாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபையின மருத்துவர் பொன்டிங்கை கடந்த திங்கட்கிழமை வைத்திய சோதனைகளுக்கு உட்படுத்தி சோதித்தபோது அவர் தற்போது மிகவும் தேறியுள்ளமை அறியப்பட்டுள்ளதை அடுத்து விரைவில் அவர் மீண்டும் விளையாடுவார் என வைத்திய இயான் ஹார்கிரீவ்ஸ் தெரிவித்தார்.

இந்தவார இறுதிக்குள் விளையாடத் தான் தயாராகிவிடுவேன் என்றும் மும்பை டெஸ்ட் போட்டியில் விளையாட ஆவலாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(ப-7)

## வாசனை வீசும் ஷரபோவா

டெனனிஸ் நட்சத்திரங்கள் பலரது பெயர்களில் வாசனைத் திர



வியங்கள் (சென்ட் போத்தல்கள்) வெளிவந்து, அவர்களது அபிமான ரசிர்களைக் கவர்ந்துள்ளன.

டெனிஸ் பிரபலங்களான அன்ட்ரு அகாசி, ஜெனியர் ஹேப்ரியாட்டி ஆகியோரது பெயர்களில் இவ்வாறு வாசனைத் திரவியங்கள் வெளிவந்திருககின்றன. இந்த வரிசையில் தறபோது 17வயதான ஷரபோவா பெயரில் புதிதாக ஒரு வாசனைத் திரவியம் அறிமுகமாக இருக்கிறது.

இது குறித்து ஷரபோவா கூறும் போது 'எனது பெயரில் வெளியாகும் இந்த சென்ட் போத்தலை நானே வடிவமைத்துள்ளேன். எனக்குப் பிடித்த நறுமணத்தை இனி அனைவரும் வாங்கிப் பயன்படுத்த முடியும்' என்றார்.

இந்த வாசனைத் திரவிய வெளியீடு தொடர்பாக அதைத் தயாரிக்கும் நிறுவனத்துடன் ஆலோசித்து வருவதாகவும், அநேகமாக அடுத்த ஆண்டு இவ்வாசனைத் திரவியம் சநதைக்கு வருமெனவும் ஷரபோவா தெரிவித்துள்ளார்.

(ப-7)

## நியூசிலாந்து-பங்களாதேஷ் முதல் டெஸ்ட்

பங்களாதேஷ்-நியூசிலாந்து அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில், பங்களாதேஷ் அணி முதல்நாள் ஆட்டத்தில் நாள் முழுவதும் களத்தில் நின்று ஆடியிருக்கிறது.

நேற்று முன்தினம் டாக்காவில் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் ஏழு ஓவர்களில் பங்களாதேஷ் அணி மிகவும் பரிதாபமாக 5 ஓடடங்களுக்கு 3 விக்கெற்றுக்களை இழந்தது.

சர்கார் ஓட்டமெதுவும் பெறாமலும், ஓமர், இக்பால் ஆகியோர் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அதைத்தொடர்ந்து நான்காவது விக்கெற்றுக்காக ஜோடி சேர்ந்த ரஜின்சலே, முகமது அஸ்ரபுல் ஆகியோர் பொறுப்பாக ஆடி 115 ஓட்டங்களைப் பெற்றனர். சலே 41 ஓட்டத்துடனும், அஸ்ரபுல் 67 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். முதல்நாள் ஆட்ட முடிவில் பங்களாதேஷ் அணி 6 விக்கெற் இழப்புக்கு 165 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நியூசிலாந்து அணி சார்பில் பந்துவீச்சில் ஓரம் பிராங்ளின், டேனியல் வெட்டோரி ஆகியோர் தலா இரண்டு விக்கெற்றுக்களை வீழ்ததினர். இவர்களில் வெட்டோரி மிகச் சிறப்பாகப் பந்துவீசியுள்ளார். அவர் தான் வீசிய 29 ஓவர்களில் 26 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சைச் சமாளித்து நாள் முழுவதும் பங்களாதேஷ் அணி களத்திலிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

(ப-7)




ஹங்கோ[illegible]யில் உள்ள ப[illegible] சாகோ நகரில் நடந்த உலக செஸ் சம்பயன் ஷிப் போட்டியில், ரஷ்ய வீரர் விளாடிமிர் கிராம்னிக் சம்பயன் பட்டம் வென்றார். டிராபயுடன் கிராம்னிக்.

# விளையாட்டு செய்திகள்

## பி.சி.சி.ஐ. பொதுக்குழுக் கூட்டம் வழக்குக் காரணமாக ஒத்திவைப்பு

அக்டோபர் 26ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் பி.சி.சி.ஐ. ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமனற உத்தரவை எதிர்த்து பி.சி.சி.ஐ தொடர்ந்த மேல்முறையீட்டு மனு மீதான வழக்கு வசாரணை உச்ச நீதிமன்றத்தில அக்டோபர் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதனால் இக் கூடடம் ஒத்திவைக்கப்படுவதாக கிரிக்கெற்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

செப்டெம்பர் 29, 30ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூடடத்தில் கிரிக்கெற் சபைத் தலைவர் மற்றும் பிற நிர்வாகிகள் பதவிக்கான தேர்தல் நடந்தது.

புதிதாகத தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் செயல்பட சென்னை உயர்நீதிமன்றம் தடைவிதித்தது. அதை எதிர்த்து பி.சி.சி.ஐ. உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. நிர்வாகிகள் செயல்பட அளித்த தடையை நீக்கிய உச்சநீதிமன்றம் இது தொடர்பான விசாரணை அக்டோபர் 26இல் நடைபெறும் என்று அறிவித்தது.

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து பிசிசிஜ தலைவராக இருந்த ஜக்மோகன் டால்மியா, கிரிக்கெற் சபையின் தலைமைப் புரவலராகத் தொடர்வது குறித்து சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. (ப-7)

## பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் போட்டியில் முரளி இல்லாத இலங்கை அணியால் ஹட்ரிக் வெற்றியை பெறமுடியுமா?

இலங்கை-பாகிஸ்தான் அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறும் இவ்வேளை, இலங்கையணி ஹட்ரிக் வெற்றியை பெறும் நோக்கில் விளையாடுகிறது.

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி ஏற்கனவே முத்தரப்பு ஒருநாள் போட்டியில் பாக்டெல் வெற்றிக் கிண்ணத்தை வென்றிருக்கிறது.

தொடர்ந்து 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி தற்போது பைசலாபாத்தில் நடைபெறுகிறது.

இத் தொடரிலும் இலங்கை அணி வெற்றிபெறறால், பாகிஸ்தான் மண்ணில் தொடர்ச்சியாக மூன்று டெஸ்ட் தொடரை வென்று இலங்கையணி ஹட்ரிக் சாதனைபடைக்க முடியும்.

கடந்த இரு தடவைகளும், இலங்கை அணி பாகிஸ்தானில் டெஸ்ட தொடரை வெனறதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் முரளிதரன். ஆனால், இப்போது அணியில் முரளி இல்லாதது இலங்கைக்கு துரதிஷ்டமே. 1995இல் டெஸ்ட் தொடரில் 2:1என்ற அடிப்படையில் இலங்கை அணி வெற்றிகொண்டபோது முரளி 15 விக்கெற்றுக்களையும், 2000ஆம ஆண்டு டெஸ்ட் தொடரிலும் 2:1 என்ற அடிப்படையில் இலங்கையணி வென்றபோது 26 விக்கெற்றுக்களையும வீழ்த்தி வெறறிக்குக் காரணமாகவிருந்தார்.

அத்தகைய முரளி தற்போது அணியில இல்லாதது பெரிய இழப்புத்தான் என இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து கூறியிருக்கிறார்.

ஆயினும், தற்போது அணியிலுள்ள அனைவரும் தங்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தினால் கட்டாயம் பாகிஸ்தான் மண்ணில் ஹட்ரிக் டெஸ்ட் தொடர் வெற்றியைப் பெறமுடியும் எனவும், அந்நோக்குடனேயே இலங்கை அணி விளையாடுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையணியில முரளிதரன் இல்லாதது தமக்குச் சாதகம் என்று கூறியிருக்கிறார் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம்-உல்-ஹக்.

உலகத் தரமவாய்ந்த சாதணைப் பந்துவீச்சாளரான முரளி, எந்தவகையான ஆடுகளங்களிலும் விக்கெற்றுக்களை வீழ்த்தக் கூடியவர். அவர் அணியில் இல்லாதது எமக்குச் சாதகமான போதும், முரளியில லாத நிலையிலும் இலங்கை அணி வெற்றி பெறக்கூடியது என்பதையும் நாம நினைவில் கொண்டிருக்கிறோம் எனவும் பாகிஸ்தான் அணித்தலைவர் கூறியிருக்கின்றார். (ப-7)

## பாராட்டு விழா

தேசிய மட்ட குண்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தினை பெற்ற கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவியான செல்வி தர்சினி குணரத்தினததைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று பனை அபிவிருத்திச்சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பனை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வர். (ப-130)

## மும்பை டெஸ்ட் போட்டியில் சச்சின் பங்குகொள்வார்

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே எதிர்வரும் 26ஆம் திகதி நாகபூரில் ஆரம்பமாகவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவாா எனத் தற்போது இந்திய கிரிக்கெற் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முழங்கையில் ஏற்பட்ட 'டென்னிஸ் எல்போ' எனும் காயம் காரணமாக சச்சின் கடந்த 2 மாதங்களுக்கு மேலாக கிரிக்கெற போட்டி எதிலும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது அவரது காயம் குணமாகி வருவதால் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் சச்சின். மும்பையில் தற்போது பயிற்சியில் ஈடுபடும் டெண்டுல்கர், ஆரம்பத்தில் டென்னிஸ் பந்தில் பயிற்சியை மேற்கொண்டார். பின்னர் கிரிக்கெற் பந்தில் துடுப்பாட்டம், பந்துவீசசு இரண்டிலும் பயிற்சியை மேற்கொண்டு வருகிறார். இதேவேளை, மும்பை டெஸ்டில் சச்சின் ப[illegible] கேற்பதற்கான வாய்ப்புகள் அ[illegible] கரித்திருப்பதாக இந்திய அ[illegible] தலைவர் சௌரவ் கங்குலி[illegible] கிரிக்கெற் சபைச் செ[illegible] நாயரும் தெரிவித்துள்ளனர். தற்போது சச்சின் பயிற்சியிலும் ஈடுபட்டிருப்பதால் அவர் அநேகமாக பங்கேற்பார் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். (ப-7)

# மகளிர் உலகம்



# ஹிட்லரின் ஜேர்மனியில் பெண்களின் நிலை

பொதுவாக ஆணாதிக்க அரசியல் கட்டமைப்புக்குள் நடாத்தப்படும் ஏனைய பிரச்சினைகளுக்குள் எவ்வாறு பெண்கள் விசேடமாக அடக்கப்படுகிறாள்கள். புனிதங்களின் பெயரால் அவை எப்படி நியாயப்படுத்தப்படுகிறது. இந்த ஒடுக்குமுறைகள் எவ்வாறு திட்டமிட்டு நிறுவனமயப்படுத்தப்படுகின்றன. இதனை எதிர்க்கமுடியாதபடி அரச இயந்திரம் எப்படி அடக்குமுறைக்கு தயாராகப்படுத்துகிறது. விடுதலையின் பெயராலும், தாய்நாட்டின் விடிவின் பெயராலும், இனத்துவத்தின் பெயராலும் இவை எல்லாம் தவிர்க்க முடியாதது என்பது எப்படி நம்பவைக்கப்படுகிறது என்பது இன்றைய கால கட்டத்தில் தமிழ்ச் சூழலில் அவசியமானவை. அப்படி ஒரு அனுபவத்தைத் தர இந்தக் கட்டுரை 60 வருடங்களுக்கு முந்திய சூழலுக்குள் கொண்டு போகிறது.

ஹிட்லரின் ஜேர்மனியில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட இடமானது குடும்பம், தாய்மை போன்றவற்றை பெற்றுக்கொள்ளக்கூடியவாறான நிலையே என்றாலும் அத்தோடு யுத்தம் தொடக்கப்பட்ட காலப் பகுதியில் யுத்தத் தளபாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் அதிகளவில் உழைப்பை செலுத்தியவர்கள் பெண்களாவர். கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அடிமை உழைப்புக்கு அள்ளுப்பட்டு வந்த காலத்தில் இந்த நிலைமை அதிகரித்தது. 1933 ஜனவரியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வரும் போது தொழிற்சாலைகளில் பணிபுரிந்த உழைப்பாளர்களில் 37.3 வீதம் பெண்களாக இருந்தனர்.

## மொழிபெயர்ப்புக் கட்டுரை

1935ஆம் ஆண்டு தேசிய உழைப்புச் சேவை சட்டத்தின் கீழ் பெண்கள் – ஆண்கள் இரு தரப்பினரும் கட்டாய தேசிய சேவைக்கு அமர்த்தப்பட்டனர். திருமணம், தாய்மை மற்றும் குடும்பம் பற்றிய கற்பிதங்களும் பிரசாரங்களும் எவ்வாறிருந்த போதும் நாசி ஆட்சியின் கீழ் தொழில் புரிந்த பெண்களின் தொகை அதிகமாக இருந்தது. இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால் நாசி ஜேர்மனியில் வேறு துறைகளில் பெண்களுக்கு இருந்த இடம். பல்கலைக்கழக பிரவேசம் தொடர்பாக கடைப்பிடித்த கொள்கையின் காரணமாக பெண்களின் பிரவேசம் 10க்கு 1 ஆக இருந்தது. இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களில் மூன்றில் இரண்டு வீதம் பெண்களாக இருந்தனர்.

இவற்றை ஆராய்ந்துகொண்டு போனபோது எமக்கு கிடைத்த முடிவுகள் இதுதான். பெண்களை மீண்டும் வீட்டுக்குள் முடக்கிவைத்திருப்பது என்பது நாசிச் சிந்தனையின் பிரதான நோக்கமாக இருக்கவில்லை. மாறாக சகல உயர் தொழில்களிலிருந்தும் அவர்களை நீக்கி அவர்களை குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களாக ஆக்குவதாகவே இருந்தது.

1934இல் நாசி வைத்தியச் சபையொன்றில் உரையாற்றிய வைத்தியத்துறை தலைவர் டாக்டர் வாக்னர் இப்படிக் கூறினார். 'நாங்கள் பெண்களுக்கு உயர்கல்வியை அளிக்கும் எண்ணத்தை விட்டுவிடுவோம்' என்றார் அவர். புதிய முறைமையினை எதிர்த்து தமது குரல்களை பெண்கள் வெளிப்படுத்தாமலுமில்லை. ஆனால் அவர்களின் குரல்கள் படிப்படியாக ஊமையாக்கப்பட்டன. புதிய அரச யந்திரம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின் நீதிபதிகளாக கடமையாற்றும் உரிமையும் பெண்களுக்கு மறுக்கப்பட்டது.



அமைச்சுப் பதவி வகித்த வில்ஹெம் பிரிக் இன் கருத்தின்படி தாய் தமது பிள்ளைக்காக தன்னை அர்ப்பணிப்பதும், மனைவி கணவனுக்காக தன்னை அர்ப்பணிப்பதும் பெண்களின் ஆயுட்கடமையானது. திருமணமாகாத பெண் தன்னைப் பாதுகாக்க பெண்களுக்கே உரித்தான தொழில்களைச் செய்வதற்கூடாகத்தான் தன்னைப் பேணிக் கொள்ளலாம். இன்னொருவகையில் கூறப்போனால் தொழிலானது ஆண்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றபோதும், நாசி அரசின் ஆணாதிக்கமானது முக்கியத்துவம் பெறுவதற்கு பிரதான காரணம் உளவியல் ரீதியான மற்றும் ஐதீகம் சார்ந்தது மாகும்.

1934 செப்ரெம்பர் 8 அன்று நூய்ரென்பேர்க்கில் ஹிட்லர் உரையாற்றியபோது, கட்டற்ற பாலியல் புரட்சிக்கு காரணம் யூத கம்யூனிசமே என்று கூறினார். பெண்கள் விடுதலை பற்றிய கருத்தாக்கம் கண்டெடுக்கப்பட்டது யூதப்பெண்களிடமிருந்தே என்பதால் அதில் கருக்கொண்டு இருப்பதும் யூத ஆத்மாவே.

பெண்களின் நிலைமை குறித்து ஹிட்லர் கொண்டிருந்தகொள்கை மிகவும் தெளிவானவை. ஏனையோரைப் போலவே அவருக்கும் பெண் – ஆண் இரு பாலினருக்குமான வேறுபாடு இயற்கையானது. 'அவளின் உலகமானது கணவன், குடும்பம், பிள்ளைகள், வீடு. ஆனால் இந்தச் சின்ன உலகம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பாதுகாக்கப்படாவிட்டால் அதை விடப் பெரிய உலகத்தைப் பாதுகாப்பது யார்? பெண்ணானவள் கணவனின் உலகத்திற்குள் நுழைய முயற்சிப்பது எமது உணர்வுகளுக்கு ஏற்புடையதல்ல. உண்மையில் இந்த இரு உலகங்களும் வேறுவேறாக இயங்குவது இயல்பானதாகத் தோன்றும். ஒரு சாராருக்கு உரிமையாவது என்பது உணர்வுபூர்வமான ஆத்மார்த்த ரீதியிலான பலமே. ஆண்களே உலகைத் தாங்கி நிற்கின்றனர். பெண்களே குடும்பத்தை தாங்கி நிற்கின்றனர். பெண்களின் உரிமை என கருத்தப்படுவது யாதெனில் இயற்கையால் அவளுக்கு நியமமாக்கப்பட்டுள்ள வாழ்க்கை முறைக்குள் கிடைக்கக்கூடிய கவனிப்பு அவளுக்கு கிடைக்கச் செய்வதையே.

பெண்களும் ஆண்களும் பூரண்மாகவே வெவ்வேறு வாழ்க்கையை அனுபவிக்கும் உயிரிகள் இரண்டு. ஆணிடம் ஆட்சி செய்வது தர்க்க அறிவு. அவன் ஆராய்வான். சில வேளைகளில் புதிய உலகைக் கண்டுபிடிப்பான். ஆனால் அவனின் தர்க்க அறிவால் பெறும் விளைவுகள் பெரும்பாலும் மாற்றமுறவும் கூடும். உணர்வுகள் தர்க்க அறிவைவிட சில வேளைகளில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. பெண்கள் என்பவர்கள் உணர்வுகள்'. மேற்படி மேற்கோள் ஹிட்லரின் புகழ் பெற்ற நூலான மயின்காம்ப் என்பதில எடுக்கப்பட்டது.

அதில் இன்னுமொரு இடத்தில் 'ஜேர்மனிய இளம் பெண்கள் அரசின் முன் சேவகர்கள். அவள் பிரஜையாவது மணமானதன் பின்னர்தான்' என்றும் குறிப்பிடுகிறார். முதலாவது நாசி வேலைத்திட்டத்தின் மூலம் கோரப்பட்ட பிரதான கோரிக்கை பெண்களின் வாக்குரிமையை இல்லாதொழிப்பது என்பதே.

1918இல் வைமார் அரசால் ஜேர்மன் மக்கள் பெற்றுக்கொண்ட சர்வஜன வாக்குரிமை நாசி ஆட்சி பதவிக்கு அமர்ந்ததும் இல்லாமல் செய்யப்பட்டது. பெண்கள் பொது வாழ்க்கையில் அந்நியப்படுத்தப்பட்டு அரச பதவிகளில் இருந்து அகற்றப்படுவதும் நாசிகளின் கொள்கையாகும்.

ஹிட்லரின் பெண்கள் கல்வியின் மூலம் இலக்காக்கிக் கொள்ள வேண்டியது எதிர்கால தாய்மைக்கு தயாராவது குறித்தே எனும் கூற்று முக்கியமாக அவசியப்படுவது எதற்கெனில் இராணுவ அரசொன்றில் ஆட்பலத்தை அதிகரிப்பதற்கான நீண்டகால இலக்கை கருத்தில் கொண்டே. நாட்டுக்காக மரணமாவதற்காக குழந்தைகள் அதிகளவில் பிறந்துகொண்டிருக்க வேண்டும். பதிவிரதைத் தனத்தை காத்துக்கொண்டு ஒரு நல்ல தாயாக இருப்பது ஒரு எடுத்துக்காட்டான பெண்ணின் கடமையாக வலியுறுத்தப்படுவது, பாலியல் தேவைகளுடன் கருவளத்தையும் கட்டாயமாக பிணைத்து வைத்திருப்பதும் முக்கியமான வழிமுறையென தெரிகிறது. நாசிகள் குடும்பக்கட்டுப்பாட்டுக்கும் கருக்கலைப்புக்கும் எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்கள் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அதுபோல இந்த வழிகளின் மூலம் பெண்களின் பாலியல் மற்றும் கருவள உரிமைகளைத் தீர்மானிப்பதும் கட்டுப்படுத்துவதும் அரசின் நடைமுறை தத்துவமாக இருந்தது. நாசி கட்சியின் ஆரம்பகாலத்தில் முக்கியமான பாத்திரமாற்றிய ப்லேட்ஸ்க்ளிங் எனும் பெண்மணியும் இதே வகையான கருத்துக்களுக்கு ஊக்கமளித்துக்கொண்டிருந்தார். அவர் இப்படிக் கூறியிருந்தார். 'ஜேர்மனிய பெண்களின் சீவியக் கடமை ஜேர்மனிய கணவனுக்கு சேவை செய்வதே. வீட்டைப்பேணிக்காத்து ஆணுக்கு திருப்தி ஏற்படுத்தக்கூடிய வகையில் நடந்துகொள்வதே' என்றார் அவர்.

நாசிக் கொள்கையானது ஆணுக்கே ஆணுக்குரிய ஒன்றாகவே இருந்து வந்தது என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. நாசி பரிசீலிப்பு குறித்து மிகவும் எமக்கு முக்கியமாவது அது பெண்களின் நிலைமையை சட்டரீதியில் கட்டுப்படுத்துவதே. நாசி அரச இயந்திரத்தின் கீழ் திருமணமாகாத பெண் – ஆண் ஆகிய இருசாராரிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டது. 1933 யூன் 1ஆம் திகதி முக்கியத்துவம் வாய்ந்த விவாகக்கடன் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி விவாகமொன்றின் மூலம் பெறப்பட்ட சகல குழந்தைக்கும் வரிவிலக்கு வழங்கப்பட்டது. பெண்ணின் பெயருக்கு இந்த கடன் வழங்கப்பட்டாலும் அதனை பெற்றுக்கொண்டது ஆண்தான். இந்தக் கடன் முறையின் மூலம் தாய்மார் தொழில்செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது.

நாசி ஜேர்மனியில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரசாரங்கள் செய்வது வைத்தியர்களுக்குக் கூட தடைசெய்யப்பட்டிருந்ததானது மோசகரமான செயலாக இருந்தது. குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை செய்துகொண்டிருந்த நிலையங்கள் 1993இன் பின் மூடப்பட்டன.

நாசி அரசு பற்றிய ஒட்டுமொத்த சாராம்சமாக பார்க்கும்போது புனிதமான தாய்மை குடும்பத்தில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றி அறியும் அதேவேளை பொருளாதார காரணங்களும் காரணியாக தொழிற்பட்டிருக்கிறது. அரசுக்கு தேவைபட்டபடி மிகவும் கடினமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக ஜேர்மனிய பெண்கள் தொழில் ரீதியாகவும் அரசியல் சமூக பங்களிப்புகளிலிருந்தும் அந்நியப்படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல் குடும்பத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்டாயம் நிறுவனமயப்படுவதற்காக அரசுக்கும் குடும்ப அலகுக்கும் இடையில் போட்டி நிலைமை ஏற்பட்டது. ஆனால் நாசி அரசு ஆணாதிக்கத்தை சித்தாந்த வழி கொண்டு நடத்திய தன்மை பிரதானப்பட்டது.

பெண்களின மீதான அடக்குமுறைகளின் மேல் எழுப்பப்பட்ட சமூக கட்டமைப்புக்குள் சர்வாதிகார இராணுவ ஆட்சியந்திரத்தை நடத்துவதென்பது இலகுவாக இருந்தது. மீண்டுமொருமுறை முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கும் விடயம் பாலியல் அரசியல் சமூக அமைப்புக்குள் பொருளாதார மற்றும் வேறும் துறைகளுடன் தொடர்புற்றிருக்கக் கூடும். ஆனால் அது பிரதானமாக ஏதாவது வாழ்முறை சார்ந்த கொள்கையாகவும் இருப்பது தான் எமது கவனத்துக்குரியது. எனவே எமது மரபில் இறுக்கமான உளவியல் சித்தாந்த கட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இன்றுவரை அதிலிருந்து எவராலும் இலகுவாக கழன்றுவிடமுடியாதபடி இருக்கிறது.

*- நெற்றிலிருந்து*

## சமைத்துச் சுவைப்போம்

### இனிப்பு சீடை

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| வறுத்த அரிசி மா | -1/2சுண்டு |
| உழுத்தம்மா | -100g |
| எள்ளு | -50g |
| சீனி | -50g |
| சர்க்கரை | -1/4kg |
| தேங்காய்ப்பூ | -பாதித் தேங்காய் |
| தேங்காயெண்ணெய் | -1/2போத்தல் |



செய்முறை:-

அரிசி மா, உழுத்தமா, தேங்காய்ப்பு, எள்ளு ஆகியவற்றை வறுத்தெடுத்து சீனி, சர்க்கரை சேர்த்து நன்கு கொதித்த சுடுநீர் விட்டுக் குழைக்கவேண்டும். நன்கு குழைத்து உரியபதம் வந்ததும் சிறுசிறு உருண்டைகளாக இறுக்கமாக உருட்டி எண்ணெயில் இட்டு நன்கு முறுகிய பதத்திற்கு பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.

## முகத்தைப் பராமரிப்பது எப்படி?

சுத்தமாக முகத்தை வைத்துக் கொள்ள வேண்டும். 1 அல்லது 2 தடவை முகத்தை சோப்பு அல்லது தண்ணீரில் கழுவினால் போதும். கழுவியபின் மிருதுவான துவாயினால முகத்தில் ஒற்றி எடுக்க வேண்டும். முகத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும என்ற எண்ணத்தில் அடிக்கடி சோப்பு போட்டு கழுவினால் முகத்தில் உள்ள இயற்கையான எண்ணெய்ப்பசை குறைந்து தோல் வறட்சியாகி விடும். ஒரு பிரச்சினைக்குத் [illegible] காண்பதற்குப் பதிலாக இரண்டு பிரச்சினைகளில் முடியும். அதாவது முகப்பரு, தோல் வறட்சி இரண்டும் ஏற்படும்.

முகத்திற்கு லேசான மேக்கப் போடவேண்டும். எண்ணெய்ப்பசையுள்ள மேக்கப் கூடாது. முன் நெற்றியில் மயிர் கற்றைகள் விழுவது போன்ற சிகை அலங்காரம் கூடாது. அதிக நேரம் வெயிலில் வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும்.



எல்லாவற்றிலும் முக்கியமானது தன்னம்பிக்கை அதாவது இந்தப் பரு நம்முடைய முக அழகைக் கெடுத்துவிட்டது என்ற தாழ்வுமனப்பான்மைகூடாது. இதை குணப்படுத்திவிட முடியும் என்ற தன்னம்பிக்கை வேண்டும்.

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

## கணிதம்

நேரம்: 4மணி

ஆக்கம்: திரு.கு.விக்னேஸ்வரன் (ஆசிரியர்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்யாசாலை.

### பகுதி I

01. 200g மிளகாயின் விலை ரூபா 15.00 ஆயின் 1.5Kg மிளகாயின் விலை என்ன?

02. சுருக்குக. 1.050 - 0.505 =

03. $4\frac{1}{5} - 2\frac{4}{5} + \frac{2}{5}$

04. 7, 11, 16, 22, ___ , ___ அடுத்துவரும் இரு உறுப்புக்களைக் காண்க.


05. குமாரின் வயது x வருடங்கள். அவரின் தந்தையின் வயது குமாரின் வயதிலும் நாலு மடங்காகும். தாயின் வயது தந்தையின் வயதிலும் மூன்று குறைவு. தாயின் வயதிற்கான கோவையைத் தருக.

06. $(45-x)^0$ இன் நிரப்புக் கோணம் யாது?

07. $60^0$ ஒரு செங்கோணத்தின் என்ன சதவீதம் ஆகும்?

08. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணத்தின் பருமன் $4x^0$ஆகும். புறக்கோணத்தின் பருமன் $2x^0$ஆகும். பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

09. $(a - \frac{1}{2^3})(a + \frac{1}{2^3})$இனை பெருக்கி வரும் விடை யாதாகும்?

10. 

சதுரம் ABCD நான்கு சிறிய சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிறிய சதுரத்தின் பரப்பளவு $36cm^2$ எனின் ABயின் நீளம் எத்தனை cm?

11. A:B = 2:3, B:C=4:5 எனின் A:B:C ஐக் காண்க.

12. Pஎன்பது நேர்முழு எண்ணாகும். P-5<2 எனின் Pயின் தீர்வாக அமையும் தொடையைத் தருக.


13. ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய x மனிதர்களுக்கு y/2 நாள்கள் தேவைப்படும். y எண்ணிக்கையான மனிதர்கள் அவ்வேலையைச் செய்ய எத்தனை நாட்கள் தேவைப்படும்?

14. ஒலிம்பிக் ஓட்ட வீரர் ஒருவர் 200M தூரத்தினை 12sகளில் ஓடி முடித்தார் எனின் அவரின் கதியை $ms^{-1}$ இல் தருக.


15. தீர்க்குக 4(5-3x)=38-5x

16. Y=½ x+3 இற்கு செங்குத்தாகவும் (0,-1)இற்கு ஊடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டினை தருக.

17. 1தொடக்கம் 4வரை இலக்கமிடப்பட்ட கோடாத நான்முகித் தாயக் கட்டைகள் இரண்டு ஒருமித்து எறியப்படுகின்றது. அவற்றின் பேறுகளின் கூட்டுத்தொகை அறியப்படுகின்றது. இதற்கான மாதிரிவெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

18. 

0 வட்டமையம்
0A=2x, AB=x, OB=20cm எனின் CBயின் நீளம் யாது?


19. 

(i) n(A)= ____
(ii) n(p)= ____
ஆகியவற்றைக் காண்க.

20. 1g3 = 0.4771 எனின் $1g\frac{1}{3}$ இன் பெறுமானத்தினைக் காண்க.

21. $2x^2$, 5xy, $3y^2$ (4x+y) இன் பொமசியினைக் காண்க.


22. $361_{\text{எட்டு}}$ இதனை அடி இரண்டில் தருக.

23. 


வட்டம் PQRக்கு AB, AC, BC என்பன வரையப்பட்ட தொடலிகளாகும்.
△ ABC யின் சுற்றளவைக் காண்க.

24. பின்வரும் நிரைகளான 30kg, 34.4kg, 35.4kg, 35.6kg இதில் (31-35)kg வகுப்பாயிடையில் அடங்குவது எது?

25. 23m நீளமான ஏணி 10m உயரமுள்ள சுவரில் படத்தில் காட்டியவாறு சாத்திவைக்கப்பட்டுள்ளது. சுவரிற்கு வெளிப்பக்கமாக உள்ள ஏணியின் நீளம் யாது? (sin30=½)




26. x=3, x=-2 ஆகியவற்றை மூலகங்களாக உடைய இருபடிச் சமன்பாட்டைத் தருக?

27. 


xஐக் காண்க.

28. $Y=x^2+x-2$ எனும் சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?

29.

| பெற்ற புள்ளிகள் | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|
| மாணவர் தொகை | 4 | 5 | 1 | 4 | 6 |

பத்து புள்ளித் திட்டத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளை அட்டவணை காட்டுகிறது. இடையப்புள்ளி யாது?

30. 

வட்டம் ABCயில் AP,CQ என்பன தொடலிகளாகும். $B\hat{C}Q$ஐக் காண்க.

### பகுதி II

*முதலாம் வினாவிற்கும் வேறு 7 வினாக்களுக்கும் விடை தருக*

01. A) i). சுருக்குக $\frac{7}{12} \div (1\frac{1}{3} - \frac{3}{4})$

ii) வாகனம் ஒன்று $10ms^{-1}$ கதியில் செல்கின்றது. 54km தூரத்தினை கடக்க எத்தனை மணித்தியாலம் எடுக்கும்.

B) சுருக்குக. i) $(2.25)^{½}$ x $(\frac{27}{64})^{1/3}$

ii) $2^{2x}$ x $4^{3x-2} = 8^{-2x}$ xஇன் பெறுமதியைக் காண்க

C) காரணிப்படுத்துக.


i) $\frac{125}{x^3} - 27$

ii) காரணி அறிவை உபயோகித்து $20^3+12^3$ இன் பெறுமதியைக் காண்க.

iii) தற்போது தகப்பனின் வயது $x^2$ ஆக இருக்கும் போது மகனின் வயது x ஆகும். தகப்பனின் வயது 13x ஆகும் போது மகனின் வயது $x^2$ ஆகும். தற்போது தகப்பனின் வயது என்ன?


D) i) செங்கோண முக்கோணி ஒன்றின் செங்கோணத்தினை ஆக்கும் ஒரு பக்கத்தின் நீளம் 11cm எனின் மற்றய இரு பக்கங்களின் நீளம் யாது?

ii) 6,4,3cm பக்க நீளங்களை உடைய முக்கோணி கூர்ங்கோண, விரிகோண, செங்கோண முக்கோணியா?

iii) 

△ ABCயின் சுற்றளவைக் காண்க

E) பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதியான 50பேரில் பேராதனை (P), யாழ்ப்பாணம் (J), மொறட்டுவ (M) ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்தனர். இதனை கீழ்வரும் வெண்வரிப்படம் காட்டுகிறது.




i) யாழ்ப்பாணம்,பேராதனை, மொறட்டுவ இப்பல்கலைக்கழகங்களில் ஏதாவது ஒன்றிற்கேனும் விண்ணப்பிக்காதோர் எத்தனைபேர்?
ii) n(JnP) =
iii) n(J)' =

F) i) 1500 இன் $33\frac{1}{3}$ % எவ்வளவு?

ii) ரூபா 4.50ற்கு வாங்கிய பொருளை ரூபா 5.00ற்கு விற்றதால் அடையும் சதவீத இலாபம் எவ்வளவு?

iii) A,B,C ஆகியோருக்கிடையே குறித்த பணம் 2:5:3 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. B பெற்ற தொகை 750/= ஆயின் Cபெற்ற தொகை யாது?

02. $Y=x^2+2x-8$ எனும் வரைபை வரையப் பொருத்தமான x,y ஆகியவற்றின் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே காட்டபபட்டுள்ளது.

| X | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 7 | .... | -5 | .... | 9 | -8 | .... | 0 | .... |

i) இவ் அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
ii) வரைபுதாளில் xஅச்சுவழியே 10 சிறிய சதுரங்கள் ஓர் அலகும் yஅச்சு வழியே பத்து சிறிய சதுரங்கள் ஓர் அலகாகவும் கொண்டு மேற்படி சார்பின் வரைபை வரைக.
iii) சார்பின் சமச்சீர் அச்சினையும், இழிவுப் பெறுமானத்தினையும் தருக.
iv) சார்பு நேராக இருப்பதற்கு xஇன் வீச்சு எதுவாக இருக்கும்?
v) சார்பினைப் பயன்படுத்தி $x=\sqrt{7}$ இன் பெறுமானங்களை 1ம் தசமதானத்திற்கு திருத்தமாக காண்க?

03. பன்நாட்டு நிறுவனம் ஒன்று தனது பங்குகளை ஏலத்தில் விற்றது. ரூபா 12.00 பங்குகளை ரூபா 15.00படி 6% இலாபம் தருவதாக கூறி விற்கப்பட்டது.

i) முரளி ரூபா 45,000.00 ஐ இக்கம்பனியில் முதலிட்டால் அவர் வாங்கிய பங்குகள் எத்தனை?

ii) 3வருடங்களில் அவர் பெற்ற இலாபம் எவ்வளவு?

iii) இத்தொகையை 4% கூட்டு வட்டிக்கு வைப்பில் இட்டால் 3வருட முடிவில் தொகை யாது?

iv) 3ம் வருடமுடிவில் ரூபா 16.00 படி தனது பங்குகள் அனைத்தையும் விற்பதால் இலாபத்துடன் பெற்ற தொகையா, கூட்டுவட்டியில் பெற்ற தொகையா இலாபகரமானது?

v) மேற்படி பங்குகள் விற்கப்பட்ட தொகையை சந்தை விலை ரூபா 12 உடைய 8% இலாபம் தரும் பிறிதோர் கம்பனியில் முதலிட்டு வருட வருமானமாக ரூபா 2400.00 பெற்றுக் கொள்கிறார். அவரின் சதவீத இலாபம் என்ன?

(ஆம் பக்கம் பார்க்க......)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்.இந்திரகுமார் வினு
புள்ளி - 164
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை



செல்வி. பத்மநாதன் பவித்ரா
புள்ளி - 142
யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை



செல்வி. சிவலிங்கம் வினோஜிகா
புள்ளி - 140
யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை



செல்வி.சபாநாயகம் கம்சிகா
புள்ளி - 139
யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை



செல்வி.இராசநாயகம் ஜெயசுமங்கலா
புள்ளி - 128
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

சிததியடைந்த இம்மாணவச் செல்வங்களை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.
இவர்களுடன் சேர்ந்து வலம்புரி நிறுவனத்தினரும் வாழ்த்துகிறார்கள்.



செல்வி.வரதராஜா இலக்சனா
புள்ளி - 125
யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை


(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**04.** a) ஒரு நாற்பக்கலின் எதிர்ப்பக்கங்கள் ஒன்றுக்கொன்று சமனும் சமாந்தரமாக இருந்தால் அந் நாற்பக்கல் ஓர் இணைகரம் ஆகும் என நிறுவுக.

b) **PQRS** ஓர் இணைகரம் ஆகும். **T,U** என்பன முறையே **PQ, SR** இன் நடுப்புள்ளிகளாகும்.

(i) **PU, TS** என்பன ஒன்றை ஒன்று இருசம கூறிடும் என நிறுவுக.

(ii) இணைகரம் **PQRS** இன் பரப்பளவிற்கும், $\Delta$ **PST** இன் இடப்பரப்பளவிற்கும் இடையிலான விகிதம் 4:1 எனக் காட்டுக.

**05.** a) தொலைபேசி நிலையம் ஒனறில் ஒரு மாதத்தில் தொலைபேசியில் கதைத்தவர்களில் விபரம் தரப்பட்டுள்ளது.

| தொலைபேசியில் கதைத்தோ நேரவிபரம் (நிமிடம்) | 1-5 | 6-10 | 11-15 | 16-20 | 21-25 | 26-30 | 31-35 | 36-40 |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 15 | 42 | 41 | 51 | 43 | 26 | 22 | 10 |

i. ஆகார வகுப்பு யாது?

ii. இடைய வகுப்பு யாது?

iii. ஆகார வகுப்பை எடுகொண்ட இடையாகக் கொண்டு தொலைபேசியில் ஒருவர் கதைதத சராசரி நேரத்தை கிட்டிய முழு எண்ணில் காண்க.

b) i. **a,b** என்பன இந் நிகழ்ச்சியாகும். **AnB** ஆயின் நிகழ்ச்சிகள் **A, B** பற்றி யாது கூறுவீர்.

ii. 2 கோழிகளுக்குச் சம எண்ணிக்கையான முட்டைகள் அடை வைக்கப்படுகின்றது. முதல் கோழியின் முட்டைகள் கூழாகும் நிகழ்தகவு 1/10, இரண்டாவது கோழி முட்டை பொரிக்கும் நிகழ்தகவு 8/9

அ) இத் தகவலை மரவரிப்படத்தில் காட்டுக.

ஆ) இரண்டு கோழிகளினதும் முட்டைகள் பொரிக்கப்படும் நிகழ்தகவு யாது?

**06.** a) **n**ஆவது உறுப்பு 3**n** - 2 ஆல் தரப்படும் கூட்டல் தொடர் ஒன்றில்

i முதல் உறுப்பு யாது?

ii பொது வித்தியாசம் யாது?

iii 22 எத்தனையாவது உறுபபு?

iv 330 எத்தனை உறுப்புகளின் கூட்டுத்தொகை?

b) **n** உறுப்புகளின் கூட்டுத்தொகை $3^n - 2^n$ ஆகவுள்ள பெருக்கல் விருத்தியில்

i முதலாம் உறுப்பு யாது?

ii பொது வித்தியாசம் யாது?


iii முதல் 3 உறுப்புக்களினதும் அடுத்த 3 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகைக்கிடையிலான விகிதம் என்ன?

**07.** நாற்பக்கல் **ABCD**யில்

**AB= 6cm , BC= 5cm, CD = 4cm** $\hat{ABC} = 120^0$, $\hat{BCD} = 105^0$ ஆகுமாறு நாற்பக்கல் **ABCD**யை கவராயம், அளவுகோல் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்தி அமைக்குக.

i. நீட்டப்பட்ட **BC**யில் **P**இருக்குமாறும் நாற்பக்கல் **ABCD**யின் பரப்பளவுக்கு சமமாகுமாறும் முக்கோணம் **APB** யை அமைக்குக.

ii **AP**யின் நீளத்தினை அளந்து எழுதுக.




08. ஒலிம்பிக் போடடியில் பளுதூககும் வீரின பளுதூக்கி படத்தில் காட்டப்பட்டுள்ளது. **A,B,C** ஆகியன உருளை வடிவானவை ஆகும். **A,B,C** என்பவற்றின் ஆரைகள் முறையே **7/4, 7/3, 7/2 cm** ஆகும். அவற்றின் உயரங்கள் முறையே **8,9,6 cm** கள் ஆகும். (இரண்டு பக்கங்களில் உள்ள உருளைகளும் சமச்சீரானவை)

1) உருளைகளின் மொத்த கனவளவைக் காண்க.

2) **1 cm³** கனவளவுடைய உருளை தளத்தின் நிறை **1/4 Kg** ஆயின் உருளையின் மொத்தத் திண்வு யாது?

3) உருளைக்கம்பி **x, y** இன் நிறை **25kg** கைபிடி கவர் **p, q** வின் நிறை **4 Kg** எனின் பளுதூக்கும் வீரர் எவ்வளவு நிறையை தூக்க வேண்டும்?

9. 1) தீர்க்குக.

$$3\lg x + 2\lg 2 = 5\lg 2 + 3\lg 2$$

2) $\lg 2 = 0.03010$, $\lg 3 = 0.4771$ எனின்

$\lg (6\ 2/3)$ ஐக் காண்க.

3) $\sqrt{\frac{3.678}{0.8762}} + (3.965)^2$ இனை மடக்கை அட்டடவனையைப் பயன்படுத்தி இரண்டு தசம தானங்களுக்கு திருத்தமாக காண்க.

10) 100**m** உயரமுள்ள கோபுர உச்சி **P**யில் குறிபார்த்து சுடும் மேடை உள்ளது. இக் கோபுரத்தை தகர்க்க இரு பதுங்கித் தாக்கும் வீரர்கள ஒன்றன் பின் ஒன்றாக வருகின்றார்கள். முதலில் வரும் வீரர் **A**யினை குறி பார்த்து சுடும் வீரர் தொலை நோக்கியில் $60^0$இறக்கக்கோணத்தில் அவதானிக்கிறார். **A** தாக்குதலுக்கு உள்ளாகிறார். இரண்டாம் வீரர் **B** $30^0$ ஏற்றக்கோணத்தில் கோபுர உச்சி **P** யில் உள்ள குறிபார்த்து சுடுபவரை அவதானிக்கிறார். காயமடைந்த தனது சகா **A**யினை மீட்க எவ்வளவு தூரம் **B** ஊர்ந்து செல்ல வேண்டும்?

# மதமாற்றத் தடைச் சட்டம் தேவையற்றது

வாதம்-1

விவாத அரங்கு -6

**மத மாற்றத் தடைச்சட்டம் தேவையானதா, தேவையற்றதா என்ற விவாத அரங்கிற்கு தேவையற்றது என தனது வாதத்தை முன்வைக்கின்றார் குப்பிளான் சு.சிவராஜன்**

மதம் மனிதனால் உருவாக்கப்பட்டது. ஆதியில் இருந்த மனிதன் இயற்கையை வழிபட்டான். இயற்கைக்குப் பயந்தான். பின்னர் காலம் செல்லச்செல்ல அவன் இயற்கையை இயக்குவதற்கு ஒரு சக்தி உண்டு என எண்ணி அச சக்தியை வழிபட்டான்.

அதாவது சூரியனைச் சூரிய பகவான் என்றும், சந்திரனை சந்திர பகவான் என்றும் வழிபட்டான்.

இவ்வாறு இயற்கையை ஆதிகால மக்கள் வழிபட்டு இருக்கிறார்கள் என இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு இருந்த மனிதன் காலப்போக்கில் தான் விரும்பிய ஏதாவது ஒன்றை தனது இஷ்ட தெய்வமாகக் கருதி வழிபடத் தொடங்கினான்.

இதன் காரணமாக சமூகத்திலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெய்வங்களை வழிபட, காலப்போககில் ஒவ்வொரு மதங்களாக அவை உருவெடுத்தன. இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்தவ மதம் என மதங்கள் தோற்றம் பெற்றன.

இவ்வாறு இன்றைய உலகிலே பல மதங்கள் காணப்படுகின்றன. மனிதனும் "மதம் கெட்டு" அலைகின்றான். இன்றைய உலகிலே"மதமாற்றத் தடைச்சட்டம்" தேவையற்றது. மனிதர்களுக்கு, அதுவும் சுதந்திரமாக வாழ விரும்பும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இப்பூமியில் எங்கும் வாழ உரிமை உண்டு. அவன் விரும்பிய தெய்வத்தை வழிபடுவதும் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதும் அவனது "தனிமனித சுதந்திரம்" எனவே மதமாற்றத் தடைச்சட்டம் போடுவது தேவையற்றது.

ஆரம்பத்திலிருந்தே ஒரு மதத்தை பல வருடங்களாக பின் பற்றுபவன் அம்மதத்தில் பிடிப்பு அற்றுப் போனால், அவன் வேறு ஒரு மதத்தை தழுவுகின்றான். அவ்வாறு அவன் மாறுவதற்கு அவனுக்கு உரிமை உண்டு. அவனை இத் தடைச் சட்டத்தைப் போட்டு கட்டுப்படுத்துவது பகுத்தறிவுள்ள மனிதருக்கு ஏற்றதன்று. இதனால் அவன், அவன் சார்ந்த குடும்பம், சமூகம் உள நெருக்கடிக்குள்ளாகும். இதனால் சமூகங்கள் இடையே பிரச்சினைகள் உருவாகி கலகங்கள் உண்டாகும்.

எனவே மதமாற்றத் தடைச் சட்டம் தேவையற்றது.

மதத்தை விமர்சிப்பவன் "மலையை நோக்கி குரைக்கும் நாயைப் போன்றவன்" எனக் கூறலாம். மதங்கள் பலவென்றாலும் அவற்றின் நோக்கம் ஒன்றேதான். அதாவது "பல நதிகள் எல்லாம் இறுதியில் சேரும் இடம் கடல் தான்" எனவே மதங்கள் எம்மை நல்வழிப்படுத்தி இறைவனைச் சென்றடையச் செய்கின்றன.

எனவே மதம் மாறுவதற்கு தடைச்சட்டம் போடுவது தேவையற்றது.

குறிப்பிட்ட ஒரு மதத்திலே ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துக்கள், இரக்கம், அன்பு, கொல்லாமை, அகிம்சை போன்ற நல்ல விடயங்கள் அதிகளவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அம் மதத்திலே ஊறியிருப்பவன் காலம் செல்லச்செல்ல அவனது உள்ளத்திலே இவற்றை விடவும் மிகவும் மேலான விடயங்களைக் கடைப்பிடிக்கின்ற இன்னுமொரு மதத்தில் மாறுவதற்கு அவனது மனம் எண்ணினால் அது தப்பில்லை. அவனது உள்ளார்ந்த அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடு தான் அவனை இன்னொரு மதத்தை நாடுவதற்கு வழிகோலுகிறது. எனவே மதம் மாறுவதற்கு தடைச்சட்டம் போடுவது தேவையற்றது.

ஒவ்வொரு மதங்களினூடாகவும் வெளிவந்த மதம் சார்பான இலக்கியங்களை எடுத்துப் பாருங்கள். அவற்றில் ஒவ்வொரு மதத்திலிருந்து வேறு ஒரு மதத்திற்கு மாறுகின்ற அடியவர்களை. உதாரணமாக இந்துமதத்திலே இருந்த திருநாவுக்கரசர் சமண மதத்தைப்பின் பற்றி சிறிது காலம் வாழ்ந்துள்ளார்.

பின்னர் சமண மதத்தைவிட இந்து மதமே சிறந்தது என உணர்ந்து திருமபவும் இந்து மதத்திற்கு மாறினார். இவையெல்லாம் மதம் சார்பான இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளது.

மேலும், புத்த பெருமானை எடுத்துப் பார்த்தால், அவர் இளவயதிலே "சித்தார்த்தன் " என்ற பெயரிலே இந்துமதத்தில் இருந்துள்ளார். இவையெல்லாம் மதம் சார்பான இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ளன.

இவ்வாறாக ஒவ்வொரு விடயங்களையும் நன்றாக ஆராய்ந்து பார்க்கும் போது எமக்கு சந்தேகங்கள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. பல இலக்கியங்களிலேயே மதம் மாறியவர்களைப் பற்றிய தகவல்கள் காணப்படும் பொழுது சுதந்திர மனிதனுக்கு பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம், அரசியல் உரிமை போன்று மதம் மாறுவதற்கும் உரிமை உண்டு.

அது அவனது "தனிமனித சுதந்திரம்" எனவே மதம் மாறுவதற்கு தடைச்சட்டம் போடுவது தேவையற்றது என்பதே எனது வாதமாகும்.

---

## எரிபொருட்களின் விலைகள் டிசம்பரில் மேலும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 60 அமெரிக்க டொலராக அதிகரிக்கப்படுமிடத்து இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோல் 90 ரூபாவாகவும், டீசல் 65 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் 55 ரூபாவாகவும் அதிகரிக்கும் என இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் கூட்டுத்தாபனம் கூறுகின்றது.

இதேவேளை, பிரதான எண்ணெய் உற்பத்தி நாடான நைஜீரியாவில் ஏற்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக உலக சந்தைக்கு கிடைக்கும் பெருமளவு எண்ணெய் கிடைக்காத காரணத்தினால் எண்ணெய் நெருக்கடி தோன்றியுள்ளதாக பிரெஞ்சுப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் அமெரிக்கா,ரஷ்யா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் எரிபொருளுக்கு தற்போது கேள்வி அதிகரித்துள்ளமையும் வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுமே எண்ணெய் உயர்வுக்கு பிரதான காரணம் என எண்ணெய் உற்பத்தி நாடுகள் கூறுகின்றன.

இதற்கிடையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொழும்பிற்கு வெளியே ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 70 ரூபாவாகவும்,டீசலின் விலையை 48 ரூபாவாகவும், மண்ணெண்ணெயின் விலை 41.60 சதமாகவும் அதிகரிக்க அரசாங்கத்திடம் இலங்கை

கூட்டுத்தாபனம் அனுமதி கோரியுள்ளதாகக் கூறப்படுகின்றது.(க)

## இடியன் வெடித்து ஒருவர் படுகாயம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் மனநோயாளி ஒருவர் இடியன் துப்பாக்கியை தனது நெஞ்சுப்பகுதிக்கு நேரே பிடித்த போது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இச்சந்திப்பில் சுண்டிக்குளம கேவிலைச் சேர்ந்தவரும், மாமுனைப்பகுதியில் வசித்து வந்த வருமான கடவுள் (வயது 26) என்பவரே காயம் அடைந்தவராவார். (ற-42)

## விசேடபூஜை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைசாலநாத சுவாமி தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் நவராத்திரி விழாவையொட்டி விசேட பூசையாக சுவாஸினி பூஜையும், குமாரி பூஜையும், குருபூஜையும் இடம்பெறவுள்ளன. (ற)

## நவராத்திரிவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழாவில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிமுதல் மகிடாசூரன் போர் இடம்பெறும்.

சனிக்கிழமை விஜயதசமி அன்று மாலை2.30மணிமுதல் அபிஷேகமும், பூசைகளும் இடம்பெற்ற பின் அம்பாள் கிராம வீதி வழியாக உலாவந்து பிப 5.30 மணிக்கு மானம்பூ உற்சவமும் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து பிராயச் சித்த அபிஷேகம் இடம்பெறும். (ற-19)

## சித்திரத்தேர் நிர்மாணம்

(பருத்தித்துறை)

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி விநாயகப் பெருமானுக்கு சுமார் 60 லட்சம ரூபா செலவில் புதிய சித்திரத்தேரை நிர்மாணிப்பதற்கான அஙகுரார்ப்பண வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சிற்பவியல் ஆய்வாளரும் காங்கேயன் கலைக்கோட்ட அதிபருமான வே. அம்பிகைபாகன் தலைமையில் இத்தேர் நிர்மாண அங்குரார்ப்பண வைபவம் இடம்பெறவுள்ளது.(ப-52)

## ஆன்மகச் சொற்பொழிவு

(கோண்டாவில்)

ஆன்மீகச் சொற்பொழிவு தொடர் -99 நல்லூர்நாவலர் மணிமண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 6.30 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் ஆன்மீகச்சொற்பொழிவு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சென்ஜோன்ஸ் கலலூரி உயர்தர வகுப்பு மாணவன் சி. சஜிவன் பாரதி கண்ட சக்தி தத்துவம் என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ப-130)

## நிதி உதவி

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக்கென லண்டனில் உள்ள பெண்மணி ஒருவர் 2 இலட்சம் ரூபா பணத்தை அனுப்பி வைத்துள்ளார். இவர் வடமராட்சி தொண்டமானாற்றைச் சேர்ந்தவா என்பது குறிப்பிடத்தக்கது. (ப-52)

## 'ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலண்டன் சுடர்ஒளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வெளியிடப்படவுள்ள 'ஒப்பற்ற தலைவர் தந்தை செ[illegible]வா' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிறுகிழமை மாலை 5மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மூதறிஞர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், ஆசியுரையை கம்பவாரிதி இ. ஜெயராஜ், ஆய்வுரையை கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தைச் சேர்ந்த வ.ரி தமிழ்மாறன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில்,சிறப்புரைகளை பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், தி. மகேஸ்வரன், மாவை சேனாதிராஜா ஆகியோருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவா ரவூப் ஹக்கீம், அனைத்திலங்கை இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ற)

## ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00மணிக்கு விஜயதசமி விழாவும் மு.ப 11.00 மணிக்கு ஏடுதொடக்கலும் நடைபெறவுள்ளன. (ற)

## பனம் விதை நடுகை

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கோவளம் கிராமத்தில் பனை அபிவிருத்திச சபையினால் பனை விதைகள் 5 ஆயிரம் நாட்டப்பட்டுள்ளது. (ப-130)

## விஜயதச[illegible] விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்[illegible] அலுவலகம் நல்லூர் கந்தசுவா[illegible] கோவில் முன்றலில் அமைந்துள்[illegible] நாவலர் மணிமண்டபத்தில் எ[illegible] வரும் 23ஆம் திகதி பி.ப 4 ம[illegible] வில் விஜயதசமி விழா வை[illegible]டாடவுள்ளது.இவ்விழா வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்தலைமையில் விழா நடைபெறவுள்ளது. (ப-130)


**அன்பு வாசகர்களே**

உங்கள் நன்மை – நலன்கருதி

வாரமலர்

**சங்குநாதம்**

உங்கள் வலம்புரியுடன் இணைக்கப்படுகின்றது

சங்குநாதத்தில் வெளிவரும் ஆக்கங்களை தினந்தோறும் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், போட்டிமுடிவுகளை

வலம்புரி -சங்குநாதம்

இல15, வெள்ளாந்தெரு

யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பத் தவறாதீர்கள்.

# நிமல் கொலைக் குற்றவாளிகளை இனம்காண விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்குக!

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் தொடரப்பட்டு விரைவில் குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவேண்டுமென்று எல்லைகளற்ற ஊடகவியலாளர் மீண்டும் ஒரு முறை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர் நிமலராஜனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி எல்லைகளற்ற ஊடகவியலாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதிக்கு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில், ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட அதே நேரம் அவர்களில் ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளைத் தொடர்ச்சியாக நடத்தாமை கவலைக்குரிய ஓர் விடயமாகும். எனவே ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட்டு நீதியை நிலைநிறுத்த வேண்டும். இதே வேளை தற்சமயம் வெளிநாட்டில் வசித்து வரும் நிமலராஜனின் குடும்பத்தினர், நான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லையெனக் கவலையடைந்துள்ளனர்.

எனவே, இது குறித்து விரைவில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-8)

## விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடாத்தும் விஜயதசமி விழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கந்தசத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், 'சர்வம் சத்தி மயம்' எனும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

பூசைவழிபாடு, ஏடு தொடக்குதல் என்பனவற்றுடன் கலை நிகழ்வுகளும் இங்கு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## சமாதான நீதிவான் நியமனம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய



கலாநிதி கனகசுந்தரம் மயிலேறும் பெருமாள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எஸ்.பி.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பல்வேறு பகுதிகளில் சிறந்த டாக்டராகப் பணியாற்றியுள்ள இவர், தலை சிறந்த சமூக சேவையாளருமாவார். (ந-52)

## ஆர்ப்பாட்டம் செய்வதை நிறுத்தி அரசிடம் சம்பள உயர்வைக்கோருங்கள்

### அமைச்சர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடாது.

பதிலாக நாட்டின் வருமானத்தை ஈட்டித்தரும் வகையில் 20 வீதமான மக்களுக்கு 80 வீத சம்பள அதிகரிப்பை வழங்குமாறு வலியுறுத்தவேண்டும் என கிராமியக் கைத்தொழில் அமைச்சர் கே.டி.லால் காந்த கேட்டுக் கொண்டுள்ளார்.

இரத்மலானையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொணடு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் நாட்டின் அபிவிருத்திக்காக ஒரு கிலோ அசிரியை 160 ரூபாவாக விற்கவேண்டும். ஆனால் அரசு மக்களின் நன்மைகருதி அவ்வாறு செய்யவில்லை.

எனவே, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பள உயர்வை வழங்கவேண்டும் என நாம் அரசைக் கேட்க வேண்டும் என அமைச்சர் மேலும தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வைபவத்தில் கலந்து கொண்ட விவசாய காலநடைகள் அமைச்சர் அநுர குமாரதிஸ்ஸநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் அனைத்துத் துறைகளும் பாரிய வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. சமூகத்தில் பொது மக்களுக்குத் தேவையான பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

டீசல் விலை அதிகரித்துள்ளது, பெற்றோலின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

அத்துடன், பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை மேலும் அதிகரிப்பதற்கு அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. பால்மா மற்றும் பொருளாதார உற்பத்திகளை அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

பஸ்கட்டணம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அரசாங்கம் ஒன்றினால் பொது மக்களுக்கு வழங்கக் கூடிய சேவைகள் கூட வீழ்ச்சியடைந்துள்ளன.

இத்தகைய நிலைமைகளினால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

ஆனால் இந்த நிலைமையை மாற்றி மக்களுக்கு நிவாரணம் வழங்கி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய அரசிடம் போதிய நிதியில்லை என்றார். (க-121)

## சிறந்த பண்ணையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் சிறந்த பண்ணையாளர்களுக்கான விருது வழங்கும் விழா புலோலி கமநலச்சேவை நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெயராஜா, புலோலி கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன், புலோலி விவசாயப் போதனாசிரியர், எஸ்.பாலசுப்பிரமணியம், கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி எஸ்.மகேந்திரராஜா, சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இதில் மாடு வளப்பு, ஆடுவளர்ப்பு, கோழி வளர்ப்புக்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட பண்ணையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்துடன், 15 வறிய விதவைக் குடும்பங்களுக்கு சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக் குஞ்சுகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் பண்ணையாளர்களுக்கிடையே நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் வெற்றி பெற்று விருதுகளைப் பெற்றோர் விபரம் வருமாறு:

**மாடு வளர்ப்பு**

**1ஆம் இடம்:-** பி.சிவரூபன் - வல்வெட்டித்துறை
**2ஆம் இடம்:-** ரி.சண்முகநாதன் - புலோலி வடகிழக்கு
**3ஆம் இடம்:-** எஸ்.யேசுநேசன் - நாகர் கோவில்

**ஆடுவளர்ப்பு**

**1ஆம் இடம்:-** கே.வி.கதிர்காமு - புலோலி
**2ஆம் இடம்:-** வி.கேசவபாலன் - நாகர்கோவில்
**3ஆம் இடம்:-** ஆர்.யோகேஸ்வரி - புலோலி தெற்கு

**கோழி வளர்ப்பு**

**1ஆம் இடம்:-** எஸ்.ஜனார்த்தனன் - தும்பளை
**2ஆம் இடம்:-** கே.இராஜகுமார் - குடத்தனை
**3ஆம் இடம்:-** கே.தயாளகாந்தா - தும்பளை. (ப-52)

## புலிகளுக்குச் சார்பாக நடந்துகொள்வதை ஐ.தே.கட்சி உடனடியாக நிறுத்தவேண்டும்

### லிபரல் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையினை தயக்கம் ஏதுமின்றி ஏற்றுக கொண்டுள்ளதை லிபரல் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அககட்சி விடுத்துள்ள அறிக்கையில் அக் கட்சியின் செயலர் டபிள்யூ. கமால் நிசங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்குச் சார்ப்பாக நடந்து கொள்ளும் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக மாற்றிக்கொள்வதோடு அதனை நிறுத்திக் கொள்ளவும் வேண்டும்.

நாட்டில் இரு தசாப்த காலமாக இடம்பெற்று வரும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜே.வி.பி.யும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு எதுவும் ஏற்படுத்தப்படுவதாக இருந்தால் அது பிரச்சினைகாக இறுதித் தீர்வின் ஒரு பகுதியாகவே அமையவேண்டுமென அவ்வறிக்கை மூலம் லிபரல் கட்சி வலியுறுத்தியுள்ளது.(க-121)

## வரவு-செலவுத் திட்டம் குறித்து பல்வேறு எதிர்பார்ப்புக்கள்

(கொழும்பு)

பொது மக்களின் வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் வகையிலான வரவு - செலவுத் திட்டத்தை ஆ[illegible]ங்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டுமென தொழிற்சங்க சம்மேளனத தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் குறைந்தது 5 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட வேண்டும்.

தேர்தல் காலத்தில் கூட்டமைப்பு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் மக்கள் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள்.

நாட்டு மக்கள் இவ் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் புரட்சிகரமான மாற்றம் ஒன்றினை எதிர்பார்க்கின்றார்கள். எனவே உரிய தீர்வினை வழங்கக் கூடிய வகையில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் ஸ்ரீ துங்க ஜெயசூரிய வலியுறுத்தியுள்ளார். (ந-121)

## மொழிவேற்றுமையால் முஸ்லிம்கள் சிங்களவருடன் இணைந்துவாழ முடியாது

### எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

தென்னிலங்கையில் உள்ள சிங்களப் பேரினவாத மக்களுடன், முஸ்லிம் மக்கள் ஒரு போதும இணைந்து வாழமுடியாது.

முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் மொழிரீதியாக ஒன்றுபட்டுள்ளதால் அவர்களுடனேயே சேர்ந்துவாழ வேண்டியவர்கள் என திருமலை மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களால் திருகோணமலையில் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் மூதூர்ப்பகுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே எழிலன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழ் மக்களை நசுக்குவதற்காகவே சிங்களப் பேரினவாத இனம் முஸ்லிம்களுக்கு சாதகமான கருத்துக்களைத் திணித்து வருகின்றது.

தமிழர்களும், அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் போராட்டமும் நசுக்கப்பட்ட பின்னர், முஸ்லிம் மக்களும் நசுக்கப்படுவார்கள் என்பது உறுதியானது. இதனை முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை, முஸ்லிம் மக்கள் மத்தியில் எழிலன் தெரிவித்த இந்தக் கருத்துக்களின் உண்மையை முஸ்லிம் மக்கள் உணர்ந்திருப்பதாக முஸ்லிம் மக்களின் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (க-121)

# வீரப்பனின் சாவில் மர்மம்



கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக, கர்நாடக அரசுகளுக்குப் பெரும் சவாலாக விளங்கி வந்த 53 வயதுடைய வீரப்பனையும் அவரது கூட டாளிகளையும் பிடிகக 1992ஆம் ஆண்டு முதல் தமிழக, கர்நாடக அதிரடிப்படையினா் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வநதனா்.

இதற்காக சத்தியமங்கலம், மேட்டூா், ஒகேனக்கல்,கொளத்தூா் உள்ளிட்ட இடங்களில் முகாமிட்டு நூற்றுக்கணக்கான அதிரடிப்படை வரா்கள் இரவு, பகல் பாராமல் தேடுதல் வேட்டை நடத்தினா். இந்தத் தேடுதல் வேட்டையில் சிக்காமல இருந்து வந்த வீரப்பன், அதிரடிப படையின பொறியில் சிக்கினாா. இதில விரப்பன் மறறும் அவரது கூட்டாளிகள் சேத்துக்குளி கோவிந்தன், சநதிரகௌடா், சேதுமணி ஆகியோா் தருமபுரி அடுத்த செல்லியம்பட்டி தொழுநோய் இல்லம் அருகே அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லபபட்டனா். இவ்வாறு இறந்துபோன வீரப்பனின் சாவு குறித்து பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில சநதனக்கடத்தல் வீரப்பன சாவு குறித்து முரண்பட்ட தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. அதிரடிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச்சண்டையில் வீரப்பன் இறந்தானா? அல்லது பொலிஸாா் அவனைக் கைது செய்து தனியே அழைத்துச்சென்று சுட்டுக்கொன்றாா்களா? அல்லது வீரப்பன் தற்கொலை செய்து கொண்டானா? என மூன்றுவிதமான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

**முதலாவது சந்தேகம்**, வீரப்பனுக்கு உளவு சொல்லும் கிராமவாசி பொலிஸ் பக்கம் சாய்ந்ததால் இந்தச் சம்பவம் நடந்ததா என்பதாகும். அதாவது வீரப்பனுக்கு உளவு சொல்லி வந்த கிராமவாசி ஒருவரைப் பொலிஸாா் தங்கள் வசப்படுத்தி வீரப்பனைத் தீர்த்துக்கட்டியதாகத் தெரிகிறது.

நீண்டகாலமாகப் பாா்வைக்குறைபாட்டால் அவதிப்பட்டுவரும் வரப்பன் அதற்காகசிகிசசை பெற விருமபுவதாக அந்தக் கிராமவாசியிடம் கேட்டுள்ளான். அதற்கு அந்தக் கிராமவாசி தனக்குத் தெரிந்த ஒரு டாக்டாிடம் அழைத்துச் செல்வதாக உறுதி கூறினாராம்.

ஏற்கனவே, பொலிஸாா் சொல்லிக் கொடுத்தபடி, பயணம் செய்வதற்கான வானையும தானே ஏற்பாடு செய்வதாக வீரபபனிடம் அந்தக் கிராமவாசி கூறினாா். இதையடுத்து பொலீஸாா் ஏற்கனவே சந்தனக்கட்டை கடத்தி பறிமுதல் செய்யப்பட்ட ஒரு வானை அம்புலன்ஸ் போல தயாா்செய்து, அந்தக் கிராமவாசியிடம் அனுப்பி வைத்தனா். அம்புலன்ஸை ஓட்டுவதற்காகப் பொலிஸ்காரா் ஒருவரையே நியமித்தனா். கிராமவாசி வானுடன் வீரப்பனிடம் சென்று சிகிச்சைக்கு ஏற்பாடு செய்துவிட்டதாகக் கூறினாராம். இதை நம்பிய வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் வானில் ஏறி அமா்நதனா். வீரப்பன் அமா்ந்ததும் வான் புறப்படவேண்டும். 2 கிராமத்தைத் தாண்டியதும் 3வது கிராமம் அருகே கரும்பு லொறி நற்கும்; அதனருகில் வானை நிறுத்தவேண்டும் என அதிரடிப்படையினா் அந்த டிரைவரிடம கூறியிருந்தனா். வான் வீரப்பனுடன் புறப்பட்டபோது டிரைவா் அருகே மற்றொருவரும் ஏறி அமா்ந்தாா். இதை வீரப்பன்



கடுமையாக ஆட்சேபித்தனா். எனினும் அந்த டிரைவா், அவா் எனக்கு மிகவும் வேண்டியவா். வழியில் இறங்கிவிடுவாா் என்று ஒருவழியாய் வீரப்பனை சமாளித்தாா்.

திட்டமிட்டபடி கரும்பு லொறி அருகே வான் வந்ததும் டிரைவா் வானை நிறுத்தியதாகவும், வண்டியில் திடீரென விளக்கை போட்டு டிரைவரும் அவருடன் இருந்த மற்றொருவரும் துப்பாக்கியால் வீரப்பனையும சேத்துக்குளி கோவிந்தனையும் சுட்டுவிட்டுக் கீழே குதித்து ஓடியதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே அங்கு தயாராய்ப் புதரில் பதுங்கியிருந்த அதிரடிப்படையினா் வானை துப்பாக்கிகளால் சரமாரியா சுட்டுசல்லடைக் கண்களாகத் துளைதனா். இதில் வீரப்பனின் மற்றக் கூட்டாளிகளும் குண்டடிப்பட்டு செத்தனா்.

**இரண்டாவது சந்தேகம்,** வீரப்பன் உடலில் இடது கண் அருகே நெற்றியில் ஒரே ஒரு குண்டு மட்டுமே பாய்ந்திருப்பதாகத தெரிகிறது. பொலிஸாா் சரமாரியாகச் சுட்டபோது ஒரு குண்டு மட்டுமே பாய வாய்பபில்லை. அவன் உடலில் பல குண்டுகள் துளைத்திருக்க வேண்டும். என்று கூறப்படுகிறது.

எனவே, துப்பாக்கிச் சண்டையில வீரப்பன் இறந்திருப்பான் என்பது ஏற்க இயலாத நிலையில் உள்ளது. ஆக, பொலிஸாா் வீரப்பனையும் மற்றவா்களையும் வானிலிருந்து இறக்கித் தனியே அழைத்துச் சென்று, மிக அருகில் வைத்தே சுட்டிருக்கிறாா்கள் என்றும் கருத்து நிலவுகிறது.

**மூன்றாவது சந்தேகம்,** வீரப்பனும் கூட்டாளிகளும் வானில் வந்தபோது அதிரடிப்படையினா் கூறியபடி, டிரைவா் வணடியை நிறுத்திவிட்டு கழே குதித்துவிட்டு ஓடினான். உடனே பொலிஸ் அதிரடிப் படையினா் வானைச் சுற்றி வளைத்ததை அறிந்த வீரப்பன் இனித் தப்பிக்க இயலாது என்பதை உணா்ந்து துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் அதைத் தொடா்நது சேத்துககுளி கோவிந்தனும தன்னையே சுட்டுக்கொண்டதாகவும் இன்னொரு தகவல் கூறுகிறது. இந்தத் துப்பாக்கிச் சதத்தைக் கேட்டதும் அதிரடிப்படையினா் வீரப்பன் பொலிஸைத் தாக்கத் தொடங்கிவிட்டதாக எண்ணி வானை நோக்கி சரமாரியாகச் சுட்டனா். இதில் வான் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டு அதனுள் இருந்த வீரப்பனின் மற்றக் கூட்டாளிகளும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

**நான்காவது சந்தேகம**, அதிரடிப் படையினா் சரமாரியாக வானைச் சுட்டு சல்லடைக் கண்களாக ஆக்கியபோது, குண்டு மழையின் இடையே சிக்கிய வீரப்பனின் உடலில் ஒரே ஒரு குண்டு மட்டுமே பாயந்தது எனறு கூறுவது சந்தேகத்தைக கிளப்புவதாக உள்ளது. அந்தக்குண்டு வீரப்பன் துப்பாக்கியிலிருந்து வந்ததா? அல்லது அதிரடிப்படையினா் துப்பாக்கியிலிருந்து வந்ததா? என்பது பிரேத பரிசோதனை அறிக்கையில் தான் தெரியவரும். அதன்பிறகுதான் வீரப்பன் தற்கொலை செய்துகொண்டானா? அல்லது பொலிஸாா் சுட்டுக்கொன்றாா்களா என்பதும் தெரியும்.

**ஐந்தாவது சந்தேகம்**, இதற்கிடையே மற்றொரு பரபரப்பான தகவலும் வெளிவநதுள்ளது. வீரப்பன் சுட்டுக்கொல்லப்படுவதற்கு 3நாட்களுக்கு முன்பே அவனை அதிரடிப்படையினா் சுற்றிவளைத்துப் பிடித்துவிட்டதாகவும், அவனுக்கு நீரிழிவு



சந்தனக் கடத்தல் வீரப்பன் வந்த அம்புலன்ஸ் வானில டிரைவராகச செயற்பட்ட அதிரடிப்படை வீரா் சரவணன் மற்றும் டி.எஸ்.பி.வெள்ளத்துரை.

நோய், கண்பாா்வை மங்குதல் போன்ற நோயகள் இருந்ததால் நடக்க முடியாத நிலையில் இருந்ததாகவும், இந்தச் சந்தா்ப்பத்தைப் பயன்படுத்தி பொலிஸ் தமது வானிலேயே அவனை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனா் என்றும், மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அடையாளம் தெரியாமல் இருக்க வீரப்பனின் முறுக்கு மீசையை கட் செய்துள்ளதாகவும், மருத்துவமனையில் சிகிச்சை அளித்தபோது அவன் பல்வேறு தகவல்களை வெளியிட்டதாகவும், இதனால் பல உண்மைகள் அம்பலத்துக்கு வரலாம் என்ற காரணத்தினால் அவனை உயிரோடு விட்டுவைக்கக்கூடாது என்று மேலிட உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றதாகவும் ஒரு தகவல் கூறுகிறது.

மேலும், சமீப நாட்களாக பொலிஸ் துறையை உலுக்கிவரும் ஜெயலட்சுமி விவகாரத்தை அடியோடு திசை திருப்பி பொலிஸ்துறையை காப்பதற்கு இந்த நாடகத்தை பொலிஸ.. அவசர அவசரமாக அரங்கேற்றியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இஸ்லாத்தின் எதிரிகளை எதிர்க்க

## சிறந்த தலைவன் ஒசாமா பின்லேடனே

(பாக்தாத்)

இஸலாத்தின் எதிரிகளுக்கு எதிராக இணைந்து செயலாற்றுவது என்ற அல்-கெய்டா அமைப்பின் கொள்கையை ஏற்றுச் செயறபடப் போவதாக ஈராக்கின அபு முசாப் அல்- ஜா்காவி தலைமையிலான தாஹித்- ஜிகாத் தீவிரவாத அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடா்பாக அல்-ஜா்காவி புதிய பிரகடனத்தை வெளியிட்டுள்ளாா,

இஸ்லாமியா்களின் ஒற்றுமையைக் குறிக்கும குா்ரானின வாசகத்துடன் தொடங்கியுள்ள இந்தப் பிரகடனத்தில் 'இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிரான மிகச் சிறந்த தலைவராக' ஒசாமா பின்லேடன் செயலாற்றுகிறாா்.

எனவே, அவருடன இணைந்து செயறபடுவதற்காக நாம் கடந்த 8 மாதங்களாகவே இருதரப்பினரும் பேசி கருத்துக்களைப் பகிா்ந்துகொண்டுவருகிறோம். கடவுளின் ஆசியால் இருதரப்பினரும் மீண்டும் பேச வாய்ப்புக் கிடைத்தது. நமது அமைப்பின் கொள்கைகளை மரியாதைககுரிய அல்- கெயடா சகோதரா்கள் புரிந்து கொண்டுள்ளனா். றமழான் மாதம் தொடங்கும நேரத்தில், இஸ்லாமியா்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு, நமது மதத்துக்கு எதிராகச் செயல்படுபவா்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று அல்-ஜா்காவி கூறியுள்ளாா்.

கடந்த இரு தினங்களுக்கு முன்புதான் தாஹித்- ஜிகாத் அமைப்பை தீவிரவாத அமைப்பாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)




## சோனியாகாந்தி பாக். செல்வார்

பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் ஆண், பெண் பாகுபாடு, பெண்கள் முன்னேற்றம் குறித்த சா்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதறகாக காங்கிரஸ் தலைவா் சோனியாகாநதி பாகிஸ்தான பயணமாகவுள்ளாா்.

இஸ்லாமாபாத்தில் வரும் பெப்ரவரி 22,23, 24 திகதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளா் கோபி அனான், அமெரிக்க நாடாளுமன்ற உறுபபினா் ஹிலாரி கிளிண்டன் ஆகியோா பங்கேற்கின்றனா்.இத்தகவலை எச்.ஐ.வி, எய்ட்ஸுக்கான ஐ.நா. சிறப்புத தூதா் நபீஸ சாதிக தெரிவித்தாா். (ப)

## அமெரிக்காவின் அதிபர் தேர்தல்

## 15 நாட்களுக்கு முன்பே வாக்குப்பதிவுகள் ஆரம்பம்

(புளோரிடா)

அமெரிக்காவில் புளோிடா மாநிலத்தில் அமெரிக்க அதிபா் தோ்தலுக்கான வாக்குப் பதிவு கடந்த திங்கட்கிழமை தொடங்கியது.

அமெரிக்காவில் தோ்தல் நாளான நவம்பா் 2ஆம் திகதிக்கு முன்னதாகவே 24 மாநிலங்களில் வாக்கெடுப்புகளைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தோ்தல் நாளன்று நீண்ட வரிசைகளில் பொதுமக்கள் நெடுநேரம் காத்திருப்பதைத் தவிா்ப்பதற்காக இந்த முறை பின்பறறப்படுகிறது.

ஆனால், கடநத திங்கட்கிழமையே பெருமளவில் வாக்காளா்கள் திரண்டதால் நெடுநேரம காத்திருககவேண்டிய நிலை ஏற்பட்டது. பலா வாக்களிககாமல் திருமபினா். வாக்குச்சாவடி ஒன்றில் கணனி இயந்திரம் பழுதுபட்டது. சில இடங்களில் வாக்குச சீட்டுகளில முழு விபரங்கள் இல்லை என பொதுமக்கள் புகாா் தெரிவித்தனா்.

கணனி மற்றும் சாதாரண வாக்குச் சீட்டுக்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி வாக்களிக்க மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு பல நாட்கள் நடைபெறுவதால் மோசடிகள் நடைபெற வாய்ப்புகள் அதிகரிக்கும் என விமா்சகா்கள கருதுகிறாா்கள்.

கணனி முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவது குறித்தும் அவா்கள் கவலை தெரிவித்தாா்கள். வாக்குச்சீட்டையே பயனபடுத்துமாறு அவா்கள் மக்களைக் கேட்டுக்கொண்டனா். டெக்ஸாஸ், கொலராடோ, அா்ககனஸாஸ் ஆகிய மாநிலங்களில் வாக்குப் பதிவு கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இயோவா, நெவேடா, புதுமெக்சிகோ ஆகிய மாநிலங்களில் வாக்குப்பதிவு ஏற்கனவே தொடங்கிவிட்டது. (ப)

## பனிக்குள் புதைந்து சாகசம்

அவுஸ்திரேலிய நாட்டில் தற்போது



கடும் பனிபபொழிவு காணப்படுகிறது. இதனால காலைநேரததில் பனிக்கட்டிகள் குவியல், குவியலாக உறைந்து காணப்படுகிறது. அந்த பனிக்குள் ஒரு வாலிபா் தலைகீழாகப் புதைந்து சாகசம் நிகழ்ததுவதைப படததில் காணலாம். அருகில் அவரது காதலி உள்ளாா். இந்த [illegible] வக் காட்சியைச் சனப் புகைப்படக் கலைஞா் லீ வீய் படம் பிடித்துள்ளாா்.

அவுஸ்திரேலியாவின் [illegible] நகரில் தற்போது நடந்துவரும் கண் காட்சியில் இந்தப் புகைப்படம் இடம் பெற்று அனைவரின் கவனத்தையும் ஈா்த்து வருகிறது. (ப)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வின் பொருள்

ஒரு பெரிய பாராட்டு விழா நடந்தது. புகையிரதத் திணைக்களத்தில் வேலை செய்த ஒருவருக்குத் தான் அந்த பாராட்டு விழா. அதுவும் அவர் சாதராண தொழிலாளியாக வேலை செய்தவர். பலமுக்கியமான தலைவர்கள் அவரைப் பாராட்டிப் பேசுவதற்காக வந்திருந்தார்கள். அந்தத் தொழிலாளி அன்று தான் அந்த வேலையில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

எல்லோருமே ஒருநாள் தான் ஓய்வு பெறுவார்கள். இருந்தாலும் எல்லோருக்கும் இந்த அளவிற்குப் பெரிய விழா நடப்பதில்லை. ஆனால் இவருக்கு நடக்கிறது அது ஏன்? அதற்குக் காரணம் உள்ளது.

என்ன காரணம் என்பது அவரைப் பற்றி பலபேர் பேசும் போதுதான் விளங்கியது. ஒருவர் சொன்னார். "இன்று பதவி ஓய்வு பெறும் இந்தப் பெரியவர் இருக்கிறாரே இவர் மற்ற எல்லோரையும் போல் சாதாரணமானவர் இல்லை. தன்னுடைய கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். கடமையில் இருந்து தவறிய தே இல்லை என்று இந்தப் பதவியில் சேர்ந்தாரோ அன்றிலிருந்து இன்றுவரை அவர் ஒரு நாள் கூட லீவு எடுத்ததில்லை. இது ஒரு பெரிய சாதனை என்றார்.

அடுத்தவர் பேசும் போது சொன்னார் "அவர் இந்த வேலையில் எப்படி சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் இருந்து ஓய்வுபெறுகிறார். வாழ்நாளில் அவருகத ஒரு சிறு பதவி உயர்வு கூடக்கிடைக்கவில்லை. அப்படி இருந்தும் அவர் மனம் சலிப்படையவில்லை. தளர்ச்சியடையவில்லை. தொடர்ந்து வேலைக்கு வந்தார். கடமையைச் செய்தார்'' என்றார் இவர்.

இன்னொருத்தர் சொன்னார் "ஒரு சமயம் அவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அந்த சமயத்தில் கூட மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு நேராக வேலைக்கு வந்து விட்டார்'' என்றார்.

இப்படி இவர்கள் பேசியதும் உண்மைதான். அப்படித்தான் அந்தப் பெரியவர் நடந்து கொண்டார். ஒருநாள் கூட கடமையிலிருந்து தவறியதில்லை. விடுமுறை நாளில்கூட அவர்வேலைக்கு வந்து விடுவார். அவரது வேலை என்ன தெரியுமா? தினமும் ரயில் நிலையத்திற்கு வருவார். கையில் ஒரு இரும்போ சுத்தியலோ வைத்திருப்பார். ரயில் வந்து நின்றவுடன் தனது கடமையை ஆரம்பிப்பார். அதாவது இன்ஜினில் தொடங்கி ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக் கொண்டு வருவார்.

ஒரு பெட்டியும் இன்னொரு பெட்டியும் சந்திக்கும் இடம் இருக்கிறதல்லவா? அந்த இடத்திற்குப் போவார். கையில்உள்ள சுத்தியலால் அங்கு இரண்டு தட்டு தட்டுவார். அடுத்த பெட்டிக்கு நடுவில் போவார். தட்டுவார். இப்படியே கடைசிப்பெட்டி வரை தட்டுவார் இதுதான் அவருக்குக்கொடுக்கப்பட்டிருந்த வேலை. இதை அவர் ஒழுங்காக செய்தார்.

இந்த ரயில் போய் அடுத்த ரயில் வந்து நிற்கும். உடனே மீண்டும் இவர் வேலையை ஆரம்பித்து விடுவார். ஒவ்வொரு பெட்டிக்கும் நடுவில் போய் தட்டி விட்டு வருவார். இந்த வேலையை அவர் கடைசி வரைக்கும் தவறாமல் செய்து முடித்தார். அதனால் தான் அவருக்கு இந்த பாராட்டு விழா. பலபேர் பரிசு கொடுத்தார்கள். பொன்னாடை போர்த்தினார்கள். பாராட்டுப் பத்திரம் வாசித்தார்கள்.

எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு அவர் நன்றி தெரிவித்துப் பேசினார். தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசஆரம்பித்தார். எல்லோரும் என்னை அளவுக்கு அதிகமாகப் புகழ்ந்து பேசினீர்கள். ஏதோ எனது கடமையைச் செய்தேன். அதற்கு மாதா மாதம் சம்பளம் வாங்கினேன். இன்று ஓய்வு பெறுகிறேன் அவ்வளவு தான். இதற்குப்போய் இவ்வளவு பெரிய விழா தேவையில்லை என்பது எனது அபிப்பிராயம்?ஆனாலும் இந்தக் கடைசி நேரத்தில் ஒரு சந்தேகத்தை உங்களிடம் கூறிவிட வேண்டும் என்று நினைக்கின்றேன்.

இவ்வளவு வருடமும் கடமை தவறாமல் வேலை செய்தேன் உண்மைதான். ஒவ்வொரு ரயிலிலும் ஒவ்வொரு பெட்டியிலும் தவறாமல் போய் தட்டிக் கொண்டிருந்த தேன். ஆனால் ஒரு விஷயம். ஏன் அப்படி தட்டினேன் என்பது இந்த நிமிடம் வரை எனக்குத் தெரியாத விடயம் என்றார்.

எப்படி இருக்கிறது இது? இந்தக்கதை யாருக்காக என்று நினைக்கிறீர்கள். ஏன் வாழ்கின்றோம் என்று தெரியாமல் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலபேர் உண்டு. அவர்களுக்காக சும்மா சொல்கின்றேன் என்று நினைக்காதீர்கள். சிலபேர் "இறந்துவிட்டார்'' என்று கூறும்போது தான் அப்படி ஒருவர் உயிருடன் இருந்தார் என்பதே நினைவிற்கு வருகிறது அல்லவா?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கட்சிகளிடையான முரண்பாடுகளே பேச்சுக்கள் தாமதமாகக் காரணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் சமாதானம் தொடர்பான தெளிவு நிலையும் இணக்கப்பாடும் இன்னமும் ஏற்படாமல் இருப்பதாலேயே சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதில் தாமத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு வருகை தந்திருந்த றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் வி.எஸ். சுமணரத்ன தெரிவித்தார்.

இணையத்தின் உப தலைவர் எஸ். ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என சுமார் 50 பேர் பங்கு பற்றியிருந்தனர். இக் கலந்துரையாடலில் விரிவுரையாளர் சுமணரத்ன தொடர்ந்து குறிப்பிடும் போது விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறிதது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் ஜே.வி.பி போன்ற பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் இன்னமும் குழப்ப நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் இம் மூன்று பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். அதன் மூலம் நாட்டில் நல்லதொரு அமைதியான சூழ்நிலை உருவாகும் எனக் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலின் போது கடந்த இரு தசாப்தங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனுபவித்த துன்பங் கள், துயரங்கள் மற்றும் இழப்புகள் குறித்து வண.பிதா சி.ஜீ. யெஜயக்குமார் அடிகள், எஸ். சீ.எஸ். சிதம்பரநாதன், பொ.விக்கினேஸ்வரன், திருமதி சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் விபரமாக எடுத்துக் கூறியிருந்தனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த றுகுணு பல்கலைக்கழகக் குழுவினர் யாழ்.பல்கலைக்கழகம், வடமராட்சி போன்ற இடங்களுக்கும் சென்றனர்.

(ப-16)

# அமைதி வழியிலான தீர்வை பெறவே நாம் விரும்புகிறோம்

## திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

தமிழர்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராகவே விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் அவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தமுடியாது. நாம் தற்சமயம் அமைதி முறையிலான தீர்வைப் பெறவே முயற்சி எடுத்து வருகிறோம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது திருமலை விஜயத்தின் இறுதிக்கட்டமாக நேற்று முன்தினம் நான்கு கூட்டங்களில் பங்குபற்றினர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எழிலன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில், யுத்தம் என்றாலும் சமாதானம் என்றாலும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து வாழ வேண்டிய நிலையிலேயே இருக்கின்றார்கள்.

வடக்கு-கிழக்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு நாட்டின் இறைமைக்குப் பாதகமானது எனக் கூறப்பட்டு அதன் செயறபாடுகள் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் தடுக்கப்பட்டன. படைத் தரப்பானது தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்கு செல்லக்கூடாது எனக் குறிப்பிட்டே யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது. ஆனால், படையினரின் நடவடிக்கைகள் இலங்கையின் இறைமையை பாதிப்பதாகவே அமைந்துள்ளன. அதற்கு தென்னிலங்கை அரசியல் வாதிகள் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடதிபதிகளைச் சந்திப்பதற்காகச் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பௌத்த அமைப்புக்கள் எதிர்ப்பை வெளியிட்டதன் மூலம் தமிழர்களை தம்மோடு இணையாமல் பிரிந்து செல்ல வேண்டும் என வலியுறுத்தியுள்ளன எனவும் எழிலன் மேலும் குறிப்பிட்டார்.இதில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், தமிழ் மக்களின் விடிவுக்காக தமிழீழ விடுதலைப்புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை தமிழர்களுக்குக்கொடுக்க மறுக்கும் அரசாங்கம், எவ்வாறு தமிழ்மக்களுக்கு உரிய இறுதித் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும்? என கேள்வி எழுப்பினார். (ரு-121)

# இராசி பலன்

**21.10.2004 (ஐப்பசி 05, வியாழக்கிழமை)**
**அட்டமி மாலை 5.02 மணிவரை**
**உத்தராடம் பிற்பகல் 4.45மணிவரை**
**இராகுகாலம் 1.32- 3.02 மணிவரை**
**சுபநேரம் 7.32 - 9.02 மணிவரை**
**அட்டமி - நவமி**
**2 ஆம் நாள் சரஸ்வதி பூசை**

- **மேடம்** இஷ்ட சித்தி, உறவினர் கலந்துரையாடல், மனமகிழ்ச்சி, மேன்மை.
- **இடபம்** எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், வயிற்றுக் கோளாறு, புதிய விடயம்.
- **மிதுனம்** பொருள் விரயம், சரீர வியாதி, எடுத்த கருமங்கள் தாமதமாகும், மனக்கவலை.
- **கடகம்** மனோ தைரியம், போசன சுகம், மாதர் நட்பு, முயற்சி கைகூடும்.
- **சிங்கம்** வாக்கு மேன்மை, சகோதரர் உதவி, தேக நலன், தனவருவாய்.
- **கன்னி** அஜீரண ரோகம், தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, வியாபார நன்மை.
- **துலாம்** உஷ்ண வியாதி, தனவிரயம், மனச் சஞ்சலம், கல்வியில் ஆர்வம்.
- **விருச்சிகம்** நற்கீர்த்தி, காரிய அனுகூலம், அன்னியர் சந்திப்பு, பணவருவாய்.
- **தனுசு** மனோ சங்கடம், அதிக செலவு, கௌரவக் குறைவு, திடீர் நன்மை.
- **மகரம்** வெகுமானம், மாதர் நட்பு, முயற்சி பலிதம், நண்பர்கள் சந்திப்பு.
- **கும்பம்** பிரயாணம், சோம்பல் நிலை, தொழிலில் மந்த நிலை, பிறருக்கு உதவுதல்.
- **மீனம்** குடும்ப மகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, எடுத்த கருமங்கள் கைகூடும், பிரபுத் தனம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# 1996 ஆம் ஆண்டு வடபகுதியில் காணாமல் போன ஐவரின் வழக்கு விசாரணை டிசம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் படையினரால் கைதாகிக் காணாமல்போன ஆறு பேர் குறித்த வழக்குகள் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

காணாமல் போனவராக குறிப் பிடப்பட்டிருந்த வேலுப்பிள்ளை உதயகுமார் என்பவர் தொடர்பான வழக்கில் முதலாம் எதிர் மனுதாரராக குறிப்பிட்டிருந்தவரும், அப்போதைய காலத்தில் கொடிகாமம் எருவன் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாகவுமிருந்தவருமான லெப் கேணல் மகிந்தரட்ண என்பவர் தனது சார்பிலான ஆட்சேபனை மனுவை நீதிமன்றில் இராணுவத்தின் நலன்களைக் கவனிப்பதற்காக பிரசன்னமாயிருந்த இராணுவச் சட்டத்தரணி கப்டன் குறுப்பு மூலம் சமர்ப்பித்தார்.

மூன்றாம் எதிர் மனுதாரரான லெப் ஜெனரல லயனல பலகல்ல சார்பான ஆட்சேபனை மனுவை செல்வி சுகந்தி கந்தசாமி நீதிமன்றில் சமர்ப்பித்தார். மனுதாரர் சார்பில் தோற்றிய சட்டத்தரணி அப்பாத்துரை விநாயக மூர்த்தி, பொறுப்பு வாய்ந்த ஒரு பாடசாலை அதிபர் மற்றும் கிராமசேவை உத்தி யோகத்தர் ஆகியோர் மூலம், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட வேலுப்பிள்ளை உதயகுமார் காணாமல் போனமை தொடர்பாக சந்தேகம் ஏற்படுகின்றமையால், இது தொடர்பான விசாரணையை சாவகச்சேரி நீதிமன்றத்தில் செய்து இந் நீதிமன்றத்திற்கு விபரங்களைச் சமர்ப்பித்து ஆவன செய்யவேண்டும் என நீதிமன்றினைக் கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து அரசு சட்டவாதி தனது சமர்ப்பணத்தைச் சமர்ப்பித்தார்.

இவற்றைக் கேட்ட நீதிபதி இவ்வழக்கு தொடர்பான முழு விசாரணையையும் மேற்கொள்வதற்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பும் படியும், வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அதுபற்றிய அறிக்கையொன்றை யாழ். மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் சாவகச்சேரி நீதிவானுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் இவ்வழக்கின் முறைப்பாட்டுக்காரரான கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரை எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி அன்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் தோற்றுமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

ஏனைய ஐந்து வழக்குகளுக்கும் பதிலிப் பத்திரமும், ஆட்சேபனைகளும் அணைப்பதற்காக வழக்குகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதிக்கே நீதிபதி ஒத்திவைத்தார்.

(ரு-19,43)

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி - குறள்

வலம்புரி

# அண்டாவில் நீந்தும் ஆமையின் நிலைவேண்டாம்

அரசும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தென்னிலங்கை மக்களின் மன நிலை திசைமாறிப் போயுள்ளது.

இருபது வருடகாலமாக நடைபெற்ற யுத் தம், புரிந்துணர்வு உடன்படிக்கை ஊடாக நிறுத்தப்பட்டதால் நாட்டில் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்பது தென்னி லங்கை மக்களின் கருத்தாகவுள்ளது.

இதன் காரணமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் அரசு மீதான அவர்க ளின் அழுத்தம் போதுமானமான இல்லை. இஃது சாதாரண மக்கள் மட்டுமன்றி பௌத்த மதகுருமார், புத்திஜீவிகள் என்ற வர்க்கத்தி லும் இருக்கவே செய்கின்றது.

அண்டாவில் உள்ள தண்ணீரில் விடப்பட்ட ஆமை குளிர்ந்த நீரில் நீந்தி ஆனந்தம் கொள் கிறது. ஆனால் சற்றுநேரத்தில் அண்டாவிற் குக் கீழ் நெருப்பை மூட்டி தண்ணீரைக் கொதிப்பேற்றி தன்னைச் சாகடிக்கப் போகின்ற அவலநிலையை அந்த ஆமை உணர்ந்த பாடில்லை.

இதுபோன்றதே இலங்கை நிலைமையும். தற்காலிகமான யுத்தநிறுத்தத்தைக் கண்டு இனப்பிரச்சினையே தீர்ந்துவிட்டது என நினைக்கின்ற தென்னிலங்கை மக்கள் அண் டாவில் நீந்தும் ஆமைக்கு ஒப்பானவர்கள். சிங்கள அரசுகள் அண்டாவிற்குக் கீழ் தணல் மூட்டுவோனுக்கு ஒப்பானது.

தற்காலிக யுத்தநிறுத்தத்தை இனப்பிரச்சி னைக்கான தீர்வாகக் காட்டும் சிங்கள அரசு கள் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணாமல் காலம் கடத்துவதானது பேரழிவுக்கு வழி வகுக்குமே அன்றி, சமாதானத்திற்கான வழி யாக அது இருக்கமுடியாது.

அதேவேளை, சிங்கள மக்களும் யதார்த் தத்தை மறந்து செயபடுவார்களேயானால் ஏற்கனவே கூறிய அண்டாவில் நீத்தும் ஆமை யின் அவலநிலை ஏற்படுவதைத் தடுப்பதும் முடியாத காரியமாகும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதில் உற்சாக மாக இருந்த தென்னிலங்கை மக்கள் இப் போது நிலைமாறிபோயுள்ளனர். கடந்த இரண்டு வருடங்களாக நீடிக்கும் யுத்தநிறுத்தமானது அவர்களின் மனநிலை மாற்றத்திற்குக் கார ணமாக இருக்கலாம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை - இனிமேல் நாட்டில் யுத்தம் ஏற்படாது என்ற உறுதிமொழி போன்றவை இனப்பிரச்சினை மீதான அக்க றையை சிங்கள மக்கள் மத்தியிலிருந்து நீக்கி விட்டது என்றே கூறவேண்டும்.

அதனை உறுதிசெய்யும் விடயமாக மத மாற்ற விவகாரத்தை குறிப்பிடலாம். அதா வது, இருபது வருட காலமாக நடந்த யுத் தத்திற்கு எந்தவிதமான தீர்வு கிடைக்காத நிலையில், அந்தப் பிரச்சினையை ஒதுக்கி வைத்து விட்டு இப்போது மதமாற்றத் தடைச் சட்டம் குறித்த விடயத்திலேயே சிங்கள மக் களும், பௌத்த துறவிகளும், அரசியல்வாதி களும் அக்கறை கொண்டுள்ளனர்.

மதமாற்றத்தைத் தடுக்கும் சட்டம் அமு லாக்கப்படவேண்டுமென்ற கொள்கையுடன் தென்னிலங்கையில் ஊர்வலங்கள் ஆரம்ப மாகிவிட்டன.

ஆக, ஒன்றைவிட்டு இன்னொன்றைத் தொட்டு அண்டாவில் நீந்தும் ஆமையின் அவலநிலையை அனுபவிப்பதே சிங்கள மக் களின் கதையாகப் போகிறது.

# வட-கிழக்கில் ஊடகசுதந்திரம் பறிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்மக்கள் குரல் கொடுக்க வேண்டும்

## செம்மணன் தெரிவிப்பு

(யாழ்ப்பாண ம்)

வடக்கு- கிழக்கில் ஊடகசுதந்திரம் அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கு எதிராக வடக்கு- கிழககில் உள்ள தமிழ் மக்கள் குரல் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளா செம்மணன் தெரிவித்துள்ளார்.

படைத்தரப்பின் பாதுகாப்புப் பகுதிக்குள் வைத்து சுட்டுக கொல்லப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே செம் மணன் இதனைத் தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

படைத்தரப்பின் பாதுகாப்புப் பகுதிகளில் நிமலராஜனுக்குப் பின்பும் தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய உணர்வுகளை வெளிப்படுத்திய இவ்வாறான ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதை எதிர்த்து நிற்க அனைத்து ஊடகவியலாளர்களும் தற்துணிவுடனும், மனத்துணிவுடனும் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

(ரு-121)

# கிழக்குப் படுகொலைகளைக் கண்டித்து மட்டு. அம்பாறை அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

தென்னிலங்கையிலுள்ள சிங்களப் பேரினவாத சக்தி களுடன் இணைந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது துரோகிகள் தமது கொலை வெறியை மேற்கொண்டு வருகின் றனர் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறை கண்டனம் வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக் கள் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைவெறி நடவடிக்கையினைக் கண்டித்து மட்டு. அம்பாறை அரசியல்துறை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்சசியான கொலை வெறிக்கு தமிழ் மக்கள் ஒருபோ தும் அஞ்சமாட்டார்கள், அடி பணிந்தும் போகமாட்டாாகள்.

தமிழ் மக்கள் மீதானதும், தமிழீழம் மீதானதுமான அனைத் துத் தடைகளும் அகற்றபபட்டு நிச்சயம் தமிழ் மக்கள் விடிவு பெறுவதோடு தலைவரின் கனவான தமிழீழமும் மலரும்.

புதுநகரில் கைக்குண்டுத் தாக்குதலில் கொலை செய் யப்பட்ட தினேஷ் எனப்படும் குமாரசூரியன் மகேஷவரன், மட்டககளப்பு நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட நாவற்காட்டைச் சேர்ந்த தம்பிபிள்ளை பாக்கியரத்தினம், ஐயங்கேணியில் சுட்டுக் கொலலப்பட்ட கதிர்காமத்தம்பி கணேசமூர்த்தி ஆகிய நாட்டுப் பற்றாளர்கள் மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண் டிக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரு-121)

# தமிழ் மக்களின் வாழ்வு உரிமைகளை ஆயுதத்தால் மட்டும் மீட்டெடுக்க முடியாது

## பிரதேச அபிவிருத்தியும் முக்கியம் என்கிறார் கேணல் சொர்ணம்

(திருகோணமலை)

ஆயுதங்கள் மூலமாக மட்டும் மக்களுடைய உரிமை களையோ மண்ணின் பாதுகாப்பையோ நிலை நிறுத்த முடி யாது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அச்சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எமது மண்ணையும், மக்களைவும் அவர்களது வாழ்வுரி மைகளையும் மீட்டெடுப்பதற்கு ஆயுதப் போராட்டம் எவ் வளவு முக்கியமோ அந்தளவுக்கு பிரதேச அபிவிருத்தியும் முக்கியமாகும்.

இந்த நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற தமிழ் மக்களுடைய வாழ்வை அபிவிருத்தி செய்வ தற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

சம்பூரிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவ லகத்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், திருகோண மலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்துக் கும் இடையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் கடல்வளம் உள்ளிட்ட மிகவும் அரிய வளங்கள் காணப்பட போதிலும், அவற்றை மக்கள் உரியமுறையில் பயன்படுத்தும் நிலை இதுவரை ஏற்பட வில்லையெனவும் கேணல் சொர்ணம் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ரு-121)

# 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களில் 25 வருட சேவை யைப் பூர்த்தி செய்து தற்போதும் சேவையில் உள்ளவர் களையும், ஓய்வுபெற்ற ஊழியர்களையும் யாழ். பல்கலைக கழக ஊழியர் சங்கம் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இவர்களுக்கான கௌரவிப்பு விழாவை எதிர்வரும் நவம்பர் மாத முதல் வாரமளவில் நடாத்துவதற்கு திட்டமி டப்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வாறு 25 வருட சேவை யைப் பூர்த்தி செய்த மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களின் விபரங்களை அறியத் தருமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. 2003ஃ2004 ஆம்ஆண்டுகாலப் பகுதியில் 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்து, தற்போதும் பணியில் உள்ள ஊழியர்கள் தமது பெயரை ஊழியர் சங்கப் பொதுஅறையில் கடமையாற்றும் அலுவல ரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடமையாற்றும் துறையிலிருந்து 2003ஃ 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களையும் தமது விபரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்திற்கு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ரு-5)

# பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா இறுதி வருடப் பரீட்சையில் தோற்றி சித்தியடையாத அல்லது குறை சித்தியடைந்த மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கும் முகமாக பரீட்சைத் திணைக்களத்தால் 6 பரீட்சைகள் நடாத்தப் படவுள்ளன.

கணனிக் கல்வி, அபிவிருத்திப் பொருளியல், நிதி முகா மைத்துவமும் முகாமைத்துவக் கணக்கியலும், வியாபாரச் சட்டம், சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி மற்றும் வியாபாரக் கொள்கையும் கூட்டுத்திட்டமிடலும் ஆகிய பரீட்சைகளே நடாத்தப்படவுள்ளன.

எனவே, மேற்படி பரீட்சைகளில் தோற்ற விரும்பும் மாண வர்களை உடனடியாக யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்ப நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தங்களது விண்ணப் பங்களை ஒப்படைக்குமாறு பணிப்பாளர் த. இராஜரட்ணம் கேட்டுள்ளார். (ரு)

# மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 2003ஃ2004 ஆம் கல்வியாண்டில் அனுமதிபெற்ற மாணவர்களுக்கான மகா பொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மாணவர் களுக்குரிய அழைப்பிதழ்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் எனவும் யாழ். பல்கலைக்கழக நலச்சேவை கள் உதவிப்பதிவாளர் யோ. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

(ரு)

## சாயி அருளமுதம்



மனிதன் தனது நேர்மையான, தளர்வு றாத முயற்சிகளின் மூலம் தனது விதியை உருவாக்கிக்கொள்ளும் சூளையும் தொழிற்சாலையுமே உலகமாகும். எவ னொருவன் இந்தச் சவாலை ஏற்றுக கொண்டு தனக்கு விதிக்கப்பட்ட ஆயுட் காலத்தையும், தான் பெற்றுள்ள திறமை, புத் திக்கூர்மை ஆகியவற்றையும் பயனுள்ள முயற சியில் செலவு செய்கிறானோ அவனே உண்மையான கர்மயோகி என்ற ஸ்தா னத்திற்கு உரித்துடையவனாகின்றான்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# பாதையை விட்டு விலகிய பஸ்கள் வாய்க்காலுக்குள் பாய்ந்தன



(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரு பஸ்கள் வீதியை விட்டு விலகி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளன. இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள் ளது.

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் மிகவேகமாக வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றும், யாழ்ப்பாணத் திலிருந்து முகமாலை நோக்கி பயணிக ளுடன் சென்றுகொண்டிருந்த மற்றொரு பஸ்ஸும் ஒன்றையொன்று நேருக்குநேரே மோதும்நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து இரு சாரதிகளும் சாது ரியமாக பேருந்துகளை வீதியோரமாகத் திருப்ப முற்பட்டனர். இதன்போது சாரதி களின் கட்டுப்பாட்டை இழந்த இரு பஸ் களும் வீதியைவிட்டு விலகி வீதியோர மாக இருந்து வாய்க்காலுக்குள் பாய்ந்த போது இரண்டு பஸ்களும் சேதங்களுக்கு உள்ளாகின.

எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. (ப-51,47)

## தெஹிவளையில் இனந்தெரியாதோரால்
# இராணுவ கப்டன் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு தெஹிவளையில் முன் னாள் இராணுவக் கப்டன் ஒருவர் இனந் தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளார்.

வாகனத்தில் சென்று கொண்டிருந்த சமயம் இவரின் மீது துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் இராணுவப் புலனாய் வுத்துறையில் பணியாற்றியபோது தவறான சில நடவடிக்கை காரணமாக இவரைச் சேவைநீக்கம் செய்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

முன்னாள் இராணுவக் கப்டன் முஹ மது ஹசீன் என்பவரே கொல்லப்பட்ட வராவர்.

பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர் புடைய சம்பவங்களினாலேயே இவர் கொல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## வாணி விழா

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாண கல்லூரியின் வாணிவிழா இன்று வட்டுகோட்டை மூன்றாம் பனை வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. (ச-39)

## அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பண நிகழ்வு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் மாவட்ட வைத் தியசாலையில் அபிவிருத்திச் சபை அங்கு ரார்ப்பண நிகழ்வு இன்று நடைபெறவுள் ளது. காலை 10 மணியளவில் மாவட்ட வைத்திய அதிகாரி என்.இராசையா தலை மையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

14 ஆண்டுகளுக்குப் பின் செயற்பட ஆரம்பித்துள்ள வைத்தியசாலையை புன ரமைப்புச் செய்வதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்தே அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. (ச-126)



றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் நேற்றிரவு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை சந்தித்து யாழ். மாவட்ட நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். படங்கள்: சதீபன்

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் இலங்கையிலும் பிரசாரம் மேற்கொள்வார்

(கொழும்பு)

அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி யின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் பிலாம் ஒகன் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பிலும், 25 ஆம் திகதி கண்டியிலும் தேர்தல் பிரசாரங்களை மேற் கொள்வார் என 4 ஆம் கட்சியின் இலங்கை கிளை அறிவித்துள்ளது.

அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி யின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் இலங்கை, இந்தியத் துணைக்கண்டம் மற் றும் உலகம் முழுவதிலும் உள்ள தொழி லாளர்களுக்கும், இளைஞர்களுக்கும், புத்தி ஜீவிகளுக்கும் பெரும் அரசியல் முக்கியத் துவம் வாய்ந்ததாகும் என அந்தக்கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா ஈராக்கை அடிமைப்படுத்து வதை ஐயத்திற்கிடமின்றி வெளிக்காட் டுகின்ற, அமெரிக்க இராணுவ நடவ டிக்கைகளுக்கு எதிராக உலகம் முழுவ திலுமுள்ள தொழிலாளர்களை ஐக்கியப் படுத்துவதற்காக ஒரு சோசலிச முன் நோக்கை அபிவிருத்தி செய்கின்ற ஒருகட்சி சோசலிசகட்சியாகும்.

இலங்கையில் நடைபெறும் கூட்டமும் அதற்கு முன்னதாக லண்டனில் நடைபெ றும் கூட்டமும் இந்த அனைத்துலக வார பிரசாரத்தின் ஒருபகுதியாகும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சருடன்...

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலை மையிலான அரசியல் விவகாரக் குழுவினர் நேற்று பெல்ஜியத்திலிருந்து நோர்வே சென்றடைந்துள்ளனர்.

நோர்வே சென்ற தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோரை சந்தித்து தேக்க நிலை அடைந்துள்ள சமாதான முயற்சி குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனுடனான சந்திப்பின்போது சமாதான முயற்சிகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவருவதாக தமிழ்ச்செல் வன் தெரிவித்துள்ளதுடன், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத் தம் கொடுக்கவேண்டுமென்று கேட்டு கொண்டார்.

சமாதான முயற்சிகளை இலங்கை அரசு இழுத்தடித்துவருவதால் சமாதான முயற்சிகளுக்கு தென்னிலங்கையிலிருந்து கணிசமான அளவு எதிரான கருத்துக்கள் மேலோங்கிவருவதாகவும், இதனால் சமா தான முயற்சிகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் உண்டெனவும் இச்சந்திப் பின்போது கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தையும் - விடுதலைப் புலி களையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவருவதற்கு பகீரத பிரயத்தனம் எடுத்துவருகிறது நோர்வே அரசு இதன் ஒருகட்டமாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை கடந்த திங்கட் கிழமை விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தி யுள்ளார்.

இப்பேச்சுக்களைத் தொடர்ந்து எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்நாட்டுப் பிரதி நிதிகளைச் சந்தித்து இலங்கைக்கான சமாதான முயற்சிகள் குறித்து விளக்கிக் கூறியிருந்தார். (ம)

## டோக்கியோ...

நாட்டில் பொருளாதாரம் குறித்து கவ னம் செலுத்துவதற்கு தேசிய சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

அபிவிருத்தித்திட்ட நட வடிக்கைக ளுக்கு மேலும் உதவியைத் தொடர்ந்து வழங்க உலக வங்கி விருப்பம் தெரிவித் துள்ளது என நிதியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-121)

## பாராளுமன்றில்...

கொண்டன. இதில் பிரதமர் மகிந்த ராஜ பக்ஸ, சபாநாயகர் டபிள்யூ.ஏ.எம். லொக்கு பண்டார, பிரதிச் சபாநாயகர் கீதாஞ்சலி குணவர்த்தன, குழுக்களின் பிரதி தவி சாளர் எம்.சச்சிதானந்தமும் கலந்து கொண்டனர். அவுஸ்ரேலியா விக்டோரியா பாராளுமன்றத்தின் சபாநாயகர், வெளி நாட்டுப் பிரமுகர்களும் கலந்துகொண்ட னர். இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ச-08)

## முஸ்லிம் விறகு வியாபாரி...

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன வளப் பிரிவினரின் அறிவித்தலின் பிரகாரம் காடுகளில் மரங்கள் வெட்டுதல் அல்லது அதற்கு துணைபோதல் போன்ற நடவடிக்கை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதென ஏற் கனவே பலமுறை தமிழீழ விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ் எச்சரிகை அறிவித்தலை உதாசீனப்படுத்தி அண்மைக் காலங்களில் காடழிப்பு நடவ டிக்கையில் அனேகர் ஈடுபட்டுவந்தனர். இத னால் வாகனேரி எல்லைப் பகுதியில் வனவளம் அழிக்கப்பட்டு வந்தது. இதை நிறுத்துவதற்காக அண்மையில் விடுதலைப் புலிகள் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையினால் சில முஸ் லிம்கள் விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு காடழிப்பு நடவடிக்கையைப் பற்றி அறிவுறுத்திய துடன், இரவு விடுதலைப் புலிப்போராளிகள் இவர்களுடன் உணவு உட்கொண்டிருக்கும் வேளையில் கருணாவின் கும்பல் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு முஸ்லிம் குடும்பஸ்தர் சுட்டுக்கொல் லப்பட்டார்.

இத்துயரச்சம்பவத்தை இட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைத் தளபதி பிரபா ஓட்டமாவடி முஸ்லிம் தலைவர் களையும், மதத்தலைவர்களையும் சந் தித்து உண்மை நிலையினை தெளிவு படுத்தினார்.

இறந்த முஸ்லிம் குடும்பஸ்தரின் உடல் அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

இப்பரிதாபகரமான சம்பவத்தையிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றனர் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (ச)

## மினிவான்...

கப்பட்டு காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர்.

இதேவேளை கடந்த வருடம் கைதடி யில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற் றது குறிப்பிடத்தக்கது. நேற்றைய விபத் துச் சம்பவத்தின்போது காயமடைந்தவர்க ளின் விபரம் வருமாறு,

கண்ணன் (வயது 19), ஆர்.கணேச லிங்கம் (வயது 46), எஸ். ராசம்மா (வயது 63), பி.கஜீதா (வயது 19), எஸ்.பிரசாத் (வயது 23), தர்சினி (வயது 37), எஸ். ஹென்றி (வயது 30), எஸ்.பகீரதன் (வயது 34), எஸ்.நடராஜன் (வயது 43), எஸ். சுமதி (வயது 34), கே.பிரதீபன் (வயது 24), திருமேரி (வயது 77), ஏ.மேரிராணி (வயது 40), தவராஜா (வயது 42), தெய்வநாயகி (வயது 51), லவக்குமார் (வயது 16), கே.சின்னத்துரை (வயது 48), மேரி ஜெயசிந்தா (வயது 43), நடராசா (வயது 50), திருச்செல்வம் (வயது 45). (ச-121-08)

நாளை முதல் உங்கள் வலம்புரியில்
மீள்பார்வை
புதியகளம்
அரசியல், அறிவியல், சமூகவியல், வரலாறுகளை
அறிந்துகொள்ள அரியதோர் சந்தர்ப்பம்
மீள்பார்வையில் முதற்பார்வையாக
மு.திருச்செல்வம்
எழுதிய
ஈழத்தமிழர் இறைமை

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.